Registered as a Newspaper

# உதயன்

'அன்புசால் வாசகர்கள், விநியோகஸ்தர்கள், விளம்பரதாரர்கள் அனைவருக்கும் உதயனின் தைத்திருநாள் நல்வாழ்த்துகள்'

சுடர் : 41
கதிர் : 50

வியாழக்கிழமை
15 ஜனவரி 2026

தை 01 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2057

பக்கங்கள் – 20
விலை – ரூபா 50



திருகோணமலையில் புத்தர்சிலை

## நான்கு தேரர்கள் உட்பட 9 பேர் விளக்கமறியலில்!

**கொழும்பு, ஜனவரி 15**

**திருகோணமலை பிரதான கடற்கரைப் பகுதியில் அத்துமீறி புத்தர்சிலை வைத்த விவகாரத்தில், 4 தேரர்கள் உட்பட 9 பேரை எதிர்வரும் 19ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.** »19

## கல்வி மறுசீரமைப்பு கைவிடப்படவில்லை

கால அவகாசமே எடுக்கின்றோம் அமைச்சர் நளிந்த தெரிவிப்பு



கொழும்பு, ஜன. 15

கல்வி மறுசீரமைப்பு கைவிடப்படவில்லை. அந்தப்பணியை மேலும் வினைத்திறனாகச் செயற்படுத்தும் வகையில் கால அவகாசமே எடுக்கின்றோம் என்று அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

6ஆம் தரத்துக்குரிய கல்வி மறுசீரமைப்புப் பணிகளை 2027ஆம் »19

## அரிசி வகைகளுக்கு ஏப்ரலில் தட்டுப்பாடு!

ஆலை உரிமையாளர்கள் எச்சரிக்கை

கொழும்பு, ஜன. 15

எதிர்வரும் ஏப்ரல் மாதமளவில், நாடளாவிய ரீதியில் அரிசிக்குத் தட்டுப்பாடு நேருமென்று ஆலைகளின் உரிமையாளர்கள் முன்னெச்சரிக்கை விடுத்துள்ளனர். அரிசி ஆலைகளின் தலைவர் பி.கே.ரஞ்சித் இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது:- »19

## இன்பர்சிட்டியில் நேற்று 40 கிலோ கஞ்சா மீட்பு!

இருவர் கைது

யாழ்ப்பாணம், ஜன. 15

வடமராட்சி - இன்பர்சிட்டி பகுதியில், நேற்று 40 கிலோ கஞ்சா மீட்கப்பட்டதுடன், »19

## போதைப்பொருளை ஒழிக்க மாவட்டந்தோறும் குழுக்கள்

வடக்கு ஆளுநர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 15

போதைப்பொருளைக் கட்டுப்படுத்துவதற்குத் தீவிர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. இதன் ஓர் அங்கமாக பிரதேச மற்றும் மாவட்ட மட்டக் குழுக்கள் உருவாக்கப்பட்டு, கண்காணிப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்படுகின்றன என்று வடக்கு மாகாண »19

ஏப்ரல் மாதம்வரை

## மின்கட்டணம் அதிகரிக்காது

கொழும்பு, ஜன. 15

இலங்கை மின்சாரசபை மின்கட்டணம் தொடர்பில் உரிய காலத்தில் முறையான முன்மொழிவை முன்வைக்கத் தவறியதால், இந்த வருடத்தின் முதலாவது காலாண் »19

போதைக்கு அடிமையானவர்களுக்கு

## யாழ்ப்பாணத்தில் வைத்து புனர்வாழ்வளிக்கத் திட்டம்

அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 15

போதைப்பொருளுக்கு அடிமையானவர்களுக்கு புனர்வாழ்வளிக்கும் மையமொன்றை யாழ்ப்பாணத்தில் அமைப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்தார். »19

## போதைப்பொருள் ஒழிப்பு யாழிலும் செயற்பாட்டுக்குழு

யாழ்ப்பாணம், ஜன. 15

உயிர்கொல்லிப் போதைப் பொருள்களை முழுமையாக ஒழிக்கும் வேலைத் திட்டத்தின் கீழ், யாழ்ப்பாணம் மாவட்டத்துக்கான செயற்பாட்டுக் குழு நேற்று »19



இந்தியாவில் இருந்து

## உயர்ரக புறாக்கள் கடத்தல் நெடுந்தீவில் மூவர் கைது!

யாழ்ப்பாணம், ஜன. 15

இந்தியாவில் இருந்து கடத்தி வரப்பட்ட உயர்ரக புறாக்களுடன் நெடுந்தீவில் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பந்தயப் புறாக்கள் உட்பட, 237 புறாக்களே இவ்வாறு கடத்தி வரப்பட்டுள்ளன. நெடுந்தீவுக் கடற்படையினர் மேற்கொண்ட »19

## ஜனாதிபதி அநுரகுமார இன்று யாழ். வருகிறார்!

யாழ்ப்பாணம், ஜன. 15

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க பொங்கல் விழாவில் கலந்து கொள்வதற்காக இன்று யாழ்ப்பாணம் வருகை தரவுள்ளார். வேலணை தெற்கு ஸ்ரீசுப்பிரமணிய சுவாமி ஆலயத்தில் இன்று பிற்பகல் 2 »19

## வல்வையில் இன்று பட்டப்போட்டி

ஆயிரக்கணக்கில் மக்கள் கூடுவர்

யாழ்ப்பாணம், ஜன. 15

உதயனின் ஊடக அனுசரணையில், வல்வை உதயசூரியன் கழகமும், வல்வை விக்னேஸ்வரா சனசமூக சேவா நிலையமும் இணைந்து ஏற்பாடு செய்துள்ள 'வினோத பட்டப்போட்டித் திரு »19

## ஊழல் இல்லா அரசாங்கமாக உருவெடுக்கிறது அநுர அரசு

அவுஸ்திரேலியத் தூதுவர் பாராட்டு

கொழும்பு, ஜன. 15

ஜனாதிபதி அநுர தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஊழல் இல்லாத அரசாங்கமாக உருவெடுத்து வருகின்றது என்று, இலங்கைக்கான அவுஸ்திரேலியத் தூதுவர் பாராட்டியுள்ளார்.

இலங்கைக்கான அவுஸ் »19






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| கொவிசெத | |
|---|---|
| திகதி | 14.01.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4316 |
| ஆங்கில எழுத்து | Z |
| வெற்றி இலக்கங்கள் | 08 60 61 67 |
| விசேட எழுத்து | Z |

| ஹந்தஹன ராசி சுப பலன் | |
|---|---|
| திகதி | 14.01.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1383 |
| வெற்றி இலக்கினம் | கும்பம் |
| வெற்றி இலக்கங்கள் | 06 21 27 36 |

| NLB ஜய | |
|---|---|
| திகதி | 14.01.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0342 |
| ஆங்கில எழுத்து | T |
| வெற்றி இலக்கங்கள் | 4 3 9 2 |

| மெகா பவர் | |
|---|---|
| திகதி | 14.01.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2422 |
| ஆங்கில எழுத்து | P |
| சுப்பர் இலக்கம் | 23 |
| வெற்றி இலக்கங்கள் | 02 33 66 68 |

| மஹஜன சம்பத | |
|---|---|
| திகதி | 14.01.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 6074 |
| ஆங்கில எழுத்து | U |
| வெற்றி இலக்கங்கள் | 4 1 5 4 6 4 |

| தன நிதானய | |
|---|---|
| திகதி | 14.01.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2104 |
| ஆங்கில எழுத்து | C |
| வெற்றி இலக்கங்கள் | 34 35 61 74 |
| விசேட எழுத்து | C |

| சுப தவசக் | |
|---|---|
| திகதி | 14.01.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0190 |
| வெற்றி இலக்கினம் | கும்பம் |
| வெற்றி இலக்கங்கள் | 29 36 67 |

# அனைவருடனும் கலந்துரையாடி கல்விக்கொள்கையைத் தயாரிக்குக

## சிறிலங்கா கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்து

**கொழும்பு, ஜன.15**

**காலத்துக்கு ஏற்றவாறு கல்வி மறுசீரமைப்பு மேற்கொள்ளவேண்டும் என்பதை நாம் ஏற்றுக்கொள்கின்றோம். ஆனால் தற்போதைய கல்வி மறுசீரமைப்பை இடைநிறுத்தி, சகல தரப்பினருடன் கலந்துரையாடி தேசியமட்டத்தில் கல்விக்கொள்கையைத் தயாரிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.**

இவ்வாறு சிறிலங்கா கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் மருத்துவர் ஜீ.வீரசிங்க வலியுறுத்தியுள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடத்திய ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

கல்வி மறுசீரமைப்பு என்ற பெயரில் தற்போது தரம் 6ஆம் வகுப்பு ஆங்கில அச்சுப்புத்தகத்தில் பதிவிடப்பட்டிருக்கும் சர்ச்சைக்குரிய விடயம் தொடர்பாகவே அனைவரும் பேசுகின்றனர். உண்மையில் அது பேசக்கூடிய விடயமே. கல்வி மறுசீரமைப்புத் தொடர்பில் தற்போது எழுந்துள்ள பிரச்சினைக்கு அடிப்படைக் காரணங்கள் உள்ளன. கல்வி மறுசீரமைப்பு எதை அடிப்படையாகக்கொண்டு செயற்படுத்தப்படுகிறது என்ற கொள்கை தெரியாது. அரசாங்கம் கல்வி மறுசீரமைப்பு நடவடிக்கையை மேற்கொள்வதற்கு முன்னர் அதுதொடர்பில் திட்டங்களை உள்ளடக்கிய சிந்தனை அறிக்கை ஒன்றைத் தயாரித்து, முன்வைத்திருக்கவேண்டும்.

கொள்கை திட்டம், நோக்கம், எண்ணக்கரு போன்ற விடயங்களை உள்ளடக்கிய வெள்ளைப் படிவம் ஒன்றைத் தயாரித்து அனைவருடனும் கலந்துரையாடி, கல்வி மறுசீரமைப்பு ஒன்றைத் தயாரிப்போம். அதற்கு நாங்கள் எமது ஆதரவை வழங்கத் தயார். அதற்காக தேசிய மட்டத்தில் மக்களை அணி திரட்ட வேண்டும்-என்றார். (எ-இ)

## மீன்பிடித்தேசியக் கொள்கை மீண்டும் வரைவாக்கம்!

கொழும்பு, ஜன.15

மீன்பிடி மற்றும் நீரியல் உயிரின வளர்ப்புக்கான தேசியக் கொள்கை இற்றைப்படுத்தப்பட்டு மீண்டும் வரைவாக்கம் செய்யப்பட்டுள்ளது. இதற்குத் தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் விதப்புரையும் பெறப்பட்டுள்ளது.

மீன்பிடித்துறையில் நியாயமான பங்கீட்டை உறுதிப்படுத்தி, மீன்பிடி மற்றும் நீரியல் உயிரின வளர்ப்பை முகாமைத்துவம் செய்யும் நோக்கில், மீன்பிடி மற்றும் நீரியல் உயிரின வளர்ப்புக்கான தேசியக் கொள்கை வரைவாக்கம் மேற்கொள்ளப்பட்டு, அந்தக் கொள்கை அவ்வப்போது காலத்தோடு தழுவியதாக மேம்படுத்தப்பட்டுவருகின்றது. ஆயினும் அந்தக் கொள்கைக்கு அமைச்சரவை அங்கீகாரம் பெறுவதற்கான நடவடிக்கைகள் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை. தற்போது அதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மீன்பிடி மற்றும் நீரியல் உயிரின வளர்ப்புக் கொள்கையை ஏனைய தொடர்புடைய கொள்கைகளுடன் ஒருங்கிணைத்து செயற்படுத்தும் நோக்கில், கடற்றொழில், நீரியல் வளங்கள் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் முன்வைத்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (எ-இ)

## நடமாடும் ஆய்வுகூடம் சாரதிகளுக்குச் 'செக்'!

கொழும்பு.ஜன.15

மது மற்றும் போதைப்பொருள் பாவனையுடன் வாகனம் செலுத்தும் சாரதிகளைக் கண்டறிய நடமாடும் ஆய்வுகூடம் தற்போது பயன்பாட்டுக்கு வந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தேசிய மருத்துவ நிறுவகத்தின் நடமாடும் ஆய்வுகூடம்மூலம், சாரதிகள் ஹெரோய்ன், கஞ்சா, பாபுல், ஐஸ் ஆகிய 4 வகையான போதைப்பொருள்களைப் பயன்படுத்தியுள்ளார்களா என்பது உடனடியாகப் பரிசோதிக்கப்படும். இந்த ஆண்டின் இதுவரையான காலப்பகுதிக்குள் மட்டும் மதுபோதையில் வாகனம் செலுத்திய 7,000க்கும் மேற்பட்டோருக்கு எதிராக வழக்குகள் பதிவாகியுள்ளன.

மது அருந்துபவர்கள், தமது வாகனத்தை செலுத்த மது அருந்தாத வேறொரு சாரதியை நியமிக்க வேண்டும் அல்லது வாடகை வாகனங்களைப் பயன்படுத்தவேண்டும். மீறுபவர்களுக்கு எதிராகச் சட்டம் மிகக் கடுமையாக நடைமுறைப்படுத்தப்படும் -என்றும் பிரதிப் பொலிஸ் மா அதிபர் மேலும் எச்சரித்துள்ளார். (ச-இ)



### வடக்கு மாகாண

## போக்குவரத்து அதிகாரசபைக்குப் புதிய பணிப்பாளர் நியமனம்!

யாழ்ப்பாணம்,ஜன.15

வடக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் புதிய தலைவராக எஸ்.விமலேஸ்வரன் நியமிக்கப்பட்டுள்ளார்.

அவருக்கான நியமனக்கடிதத்தை நேற்றுப் புதன்கிழமை வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன் யாழ். சுண்டுக்குளியில் அமைந்துள்ள வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் வைத்து வழங்கிவைத்தார். (ச-66)

| சுபிரி தன சம்பத | |
|---|---|
| திகதி | 14.01.2026 |
| தினம் | புதன்கிழமை |
| வெற்றி வாரம் | 0782 |
| ஆங்கில எழுத்து | G |
| வெற்றி இலக்கம் | 5 0 2 0 4 9 |

| Super Ball (DLB) | |
|---|---|
| திகதி | 14.01.2026 |
| தினம் | புதன்கிழமை |
| சீட்டிழுப்பு வாரம் | 3048 |
| ஆங்கில எழுத்து | Y |
| வெற்றி இலக்கம் | 12 15 29 71 |

| சனிதா (DLB) | |
|---|---|
| திகதி | 14.01.2026 |
| தினம் | புதன்கிழமை |
| ஆங்கில எழுத்து | F |
| வெற்றி இலக்கம் | 13 37 38 56 |
| வெற்றி வாரம் | 5209 |

| SASIRI (DLB) | |
|---|---|
| திகதி | 14.01.2026 |
| தினம் | புதன்கிழமை |
| வெற்றி வாரம் | 0878 |
| வெற்றி இலக்கம் | 27 32 44 |

| லக்ன ராசி (DLB) | |
|---|---|
| திகதி | 14.01.2026 |
| தினம் | புதன்கிழமை |
| | மகரம் |
| வெற்றி இலக்கம் | 13 35 44 55 |
| சீட்டிழுப்பு வாரம் | 4760 |

| KAPRUKA (DLB) | |
|---|---|
| திகதி | 14.01.2026 |
| தினம் | புதன்கிழமை |
| ஆங்கில எழுத்து | Z |
| சுப்பர் இலக்கம் | 31 |
| வெற்றி இலக்கம் | 05 43 60 67 |
| வெற்றி வாரம் | 2224 |

| அத கோடிபதி (DLB) | |
|---|---|
| திகதி | 14.01.2026 |
| தினம் | புதன்கிழமை |
| ஆங்கில எழுத்து | T |
| வெற்றி இலக்கம் | 25 56 69 72 |
| வெற்றி வாரம் | 2874 |

## உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட மின்விமானம் சோதனையில்

கொழும்பு, ஜன.15

உள்நாட்டில் வடிவமைக்கப்பட்டு, உருவாக்கப்பட்டுள்ள eVTOL விமானம் தற்போது பறப்புச் சோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டுவருகின்றது.

மின்சாரத்தில் இயங்கும் இந்த விமானம் செங்குத்துப் புறப்பாடு மற்றும் தரையிறக்கத்தை மேற்கொள்ளக்கூடியது என்றும், இந்த விமானத்தின் உருவாக்கம் இலங்கை விமானப் போக்குவரத்துத் துறையின் ஒரு வரலாற்றுச் சாதனை என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த விமானம் தற்போது 100 கிலோ கிராம் பாரத்துடன், பாதுகாப்பு மற்றும் தன்னியக்க (autonomous) செயற்பாடுகளை உறுதிப்படுத்தும்வகையில் சோதனைக்குட்படுத்தப்பட்டுவருகிறது. ஒரு நபருக்கான கிலோமீற்றர் செலவு 40க்கும் குறைவாக மலிவு வான்போக்குவரத்தை வழங்குவதை இலக்காகக் கொண்டு இந்தத் திட்டம் செயற்படுத்தப்பட்டுவருகின்றது.

45 நிமிடங்களுக்குள் மீள்மின்னோற்றம் செய்யக்கூடிய வசதி மற்றும் உலகத் தரத்திலான தொழில்நுட்பத்தை உள்ளூர் செலவில் வழங்கும் திறன் ஆகியவை இந்த திட்டத்தின் முக்கியமான அம்சங்களாக உள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





நெல்லியடி பொலிஸ் புலனாய்வுத்துறை மற்றும் கரணவாய் கொலின்ஸ் விளையாட்டுக் கழக இளைஞர்களின் ஏற்பாட்டில் இரத்ததான முகாம் நெல்லியடி கரணவாய் மூத்த விநாயகர் ஆலய் திருமண மண்டபத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் பொலிஸ் கான்ஸ்டபிளாகக் கடமையாற்றிய அம்பாறை மாவட்டம், திருக்கோவில் பகுதியைச் சேர்ந்த பத்மநாதன் ஜதர்சன் என்பவர் விடுமுறையில் சென்ற நிலையில் அங்கு இடம்பெற்ற வீதி விபத்தில் கடந்த மாதம் உயிரிழந்தார். அவரது முதலாம் மாத நினைவாக இந்த இரத்ததான முகாம் நடைபெற்றது. (எ-41-100)




சாவகச்சேரி நகரசபையின் கல்வயல் வட்டாரத்தில் பழுதடைந்து காணப்பட்ட 60 வீதி விளக்குகள் கடந்த சனிக்கிழமை இலங்கை மின்சாரசபைப் பணியாளர்களால் பொருத்தப்பட்டன. வட்டார உறுப்பினர் இ. யோகநாதனின் வேண்டுகோளுக்கிணங்க இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. (எ-41-9)



சாவகச்சேரி, கொடிகாமம், வரணி பிரிவுக்குட்பட்ட 3 பயனாளிகளுக்கு வாடகைக்கு விடப்படும் சமையல் உபகரணங்கள், உளுந்து அரைக்கும் இயந்திரம் என்பன கடந்த செவ்வாய்க்கிழமை வழங்கப்பட்டன. தென்மராட்சிப் பிரதேச செயலக சமுர்த்தி அபிவிருத்தி அலகின் ஏற்பாட்டில் பிரதேச செயலாளர் எவ்.சீ. சத்தியசோதி அவற்றைக் கையளித்தார். (எ-41-9)



தென்மராட்சிப் பிரதேச செயலக சமுர்த்தி அபிவிருத்தி அலகின் ஏற்பாட்டில் வரணி மற்றும் கைதடிப் பிரிவுக்குட்பட்ட 3 பயனாளிகளுக்கு மேசன் உபகரணங்கள், விவசாய உபகரணங்கள் போன்றன அண்மையில் வழங்கப்பட்டன.
உதவிப் பிரதேச செயலாளர் திருமதி வாகினி நிருபராஜ் மற்றும் தலைமையக முகாமையாளர் ஆகியோர் அவற்றைக் கையளித்தனர். (எ-41-9)

யாழ். பிராந்திய சுகாதாரசேவைகள் பணியக பூச்சியியல் பரிசோதனைக் குழுவினர் சாவகச்சேரி நகரப்பகுதியில் டெங்கு நுளம்புக் கட்டுப்பாட்டு ஆய்வை அண்மையில் மேற்கொண்டனர். ஆய்வின்போது குடியிருப்பு ஒன்றிலும், அரச அலுவலகம் ஒன்றிலும் புகையூட்டல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. (எ-41-9)







சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் சாவகச்சேரிப் பகுதியைச் சேர்ந்த 30 குடும்பங்களுக்கு பொங்கல் பொருள்களை கடந்த திங்கட்கிழமை வழங்கினர். (ச-41-9)



வவுனியாவில் 11 அறநெறிப்பாடசாலைகளுக்குத் தைப்பொங்கலை முன்னிட்டுச் சந்நிதியான் ஆச்சிரம நிர்வாகத்தினரால் பண்டிகைப் பொதிகள் பூவரசங்குளம் அறநெறிப்பாடசாலையில் வைத்து கடந்த திங்கட்கிழமை வழங்கப்பட்டன. (ச-41-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தைப்பொங்கல் உற்சவம்

தெல்லிப்பழை காசிவிநாயகர் ஆலயத்தின் தைப்பொங்கல் உற்சவம் இன்று வியாழக்கிழமை காலை 8 மணியளவில் ஆலய முன்றலில் பொங்கலுடன் ஆரம்பமாக வுள்ளது. பொங்கலைத் தொடர்ந்து விநாயகப் பெருமானுக்குச் சிறப்புப் பூஜை வழிபாடுகள் இடம்பெற்று அதனைத் தொடர்ந்து விநாயகப் பெருமான் வீதி உலா வந்து அடியார்களுக்கு அருள்பாலிப்பார். அதனைத் தொடர்ந்து ஆலயத்தில் நடைபெற்று வரும் அறநெறி வகுப்பு மாணவர்களுக்கான பண்பாட்டு விளையாட்டுகளும் இதன் போது அரங்கேறவுள்ளன. (ச-66)



**Annamalian Sri Ragaventhirar Enterprises (Pvt) Ltd**

அன்பர்களுக்கும், ஆதரவாளர்களுக்கும் இனிய தைப்பொங்கல் நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றோம்




புதுப்பொலிவுடன் மெருகேற்றப்பட்டுள்ளது. இந்திய திரைப்படங்களை படமாக்குவதற்கு சிறந்த மண்டபம், திருக்கல்யாணம், பூப்புனித நீராட்டுவிழா, கிறிஸ்தவ பதிவுத் திருமணங்கள், முஸ்லீம் நிக்ஹா (திருமணங்கள்) ஏனைய வைபவங்களையும் நடதடதுவதற்கு நாடுங்கள்

**அண்ணாமலையான் ஸ்ரீ ராகவேந்திரர் கல்யாண மண்டபம்.**

**இல.542 கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.**

**021 222 1355
076 744 6064**

**எமது வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் இனிய தைத்திருநாள் நல்வாழ்த்துக்கள்!**

யாழ் நகரில் உங்கள் தேவைக்கேற்ப சகல விதமான தீயணைக்கும் கருவிகளையும் விற்பனை செய்யும் வடமாகாணத்தின் அனுபவம் வாய்ந்த நிறுவனம்



- புதிய தீ அணைக்கும் கருவிகளும் மற்றும் (Fire Alarm System) களையும் பெற்றுக் கொள்ளலாம்.
- பாவித்த தீ அணைக்கும் கருவிகளையும் மீள் நிரப்பியும் கொடுக்கப்படும்.

புதிதாக நிர்மானிக்கப்பட்ட கட்டடங்களுக்கு **தீ அணைப்புக் கருவிகள் (Fire Alarm System)** பொருத்திக் கொடுக்கப்படும்.

**YARL FIRE PROTECTORS**

**யாழ். தீ அணைக்கும் பாதுகாப்பாளர்கள்**

**தீ விபத்திலிருந்து உங்களை பாதுகாப்பதே எங்கள் நோக்கம்**



உங்கள் உடனடித் தொடர்புகளுக்கு: **T.P: 021 221 9905**

**111B, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
111B, Kannathiddy Road, Jaffna.**

இலங்கையின் மிகப்பெரிய ஓடு (Tile) உற்பத்தியாளர்,

## தனியுரிமை கூட்டாளர்களைத் தேடுகிறது

**வடக்கு மற்றும் கிழக்கு பகுதி**

கிழக்கு பகுதி - காத்தான்குடி, அக்கரைப்பற்று, அம்பாறை

வடக்குப் பகுதி - வவுனியா, கிளிநொச்சி

இலங்கையின் மிகவும் நம்பகமான மற்றும் மிகப்பெரிய ஓடு (Tile) உற்பத்தியாளரான மெக்டைல்ஸ், நாடளாவிய ரீதியில் தனது இருப்பை விரிவுபடுத்தி வருகிறது, மேலும் தொலைநோக்கு பார்வை கொண்ட தொழில்முனைவோரை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கான உரிமையாளர் காட்சியறை செயல்பாட்டாளர்களாக எங்களுடன் கூட்டு சேர அழைக்கிறோம்

பல தசாப்த கால உற்பத்தி சிறப்பம்சம், அதிநவீன தொழில்நுட்பம் மற்றும் ஒப்பிடமுடியாத தயாரிப்பு தொகுப்பு, மெக்டைல்ஸ் ஒரு வலுவான (பிராண்ட்), நிலையான தேவை மற்றும் தொழில்முறை செயல்பாட்டு ஆதரவு ஆகியவற்றால் ஆதரிக்கப்படும் ஒரு சக்திவாய்ந்த வணிக வாய்ப்பை வழங்குகிறது.

2026 ஆம் ஆண்டில் நாங்கள் நம்பிக்கையுடன் நகரும்போது, உலகத் தரம் வாய்ந்த காட்சியறை அனுபவங்கள் மூலம் வலுவான, மேலும் இணைக்கப்பட்ட தேசத்தை கூட்டாகக் கட்டியெழுப்ப உறுதியான, வளர்ச்சி சார்ந்த நம்பகமானவர்களை நாங்கள் தேடுகிறோம்.

**மெக்டைல்ஸ் உடன் ஏன் இணைய வேண்டும்**

இலங்கையின் மிகப்பெரிய ஓடு (Tile) உற்பத்தி திறன்
வலுவான (பிராண்ட்) அங்கீகாரம், நாடளாவிய நம்பிக்கை,
பரந்த அளவிலான (பிரீமியம்) மற்றும் மலிவான விலையில் ஓடுகளுக்கான (Tile) தீர்வுகள்
முழுமையான ஆதரவு - சந்தைப்படுத்தல், பயிற்சி மற்றும் செயல்பாடுகள்
நீண்ட கால வளர்ச்சி திறனுடன் கவர்ச்சிகரமான வருமானம்
பிரித்தியேக பிரதேச வாய்ப்புகள்

**சிறந்த காட்சியறை உரிமையாளர்கள்**

தரம், வளர்ச்சி மற்றும் வாடிக்கையாளர் சிறப்பில் ஆர்வம் கொண்டவர்.
நீண்டகால தொலைநோக்குப் பார்வையுடன் நிதி ரீதியாக திறமையானவர் (வங்கி உத்தரவாதம்)
கட்டுமானப் பொருட்கள், சில்லறை விற்பனை அல்லது வர்த்தகத்தில் அனுபவம் (விருப்பம்)

**நீர் ஆர்வமாக இருக்கின்றீர்களா?..**


மெக்டைல்ஸுடன் கைகோர்த்து 2026 இல் இலங்கையின் வளர்ச்சிக் கதையில் ஒரு பகுதியாக.

Call or WhatsApp - 0701 712 774 - Pradeep | Email - office@macktiles.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பருத்தித்துறை நகரில் வடிகால் மூடிகள் சீரமைப்பு

பருத்தித்துறை, ஜன.15
பருத்தித்துறை நகரின் மத்தியில் அமைந்துள்ள வடிகால் மூடிகள் சீரமைக்கும் பணிகள் வீதி அபிவிருத்தி அதிகாரசபையால் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை மேற்கொள்ளப்பட்டன.

வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்குச் சொந்தமான குறித்த வடிகால்களின் மூடிகள் சீரற்று சிதைவடைந்து காணப்பட்டன. இதனால் நவீன சந்தை கட்டடத்தொகுதிக்கு வந்து செல்லும் பொதுமக்கள், வர்த்தகர்கள், மரக்கறி வியாபாரிகள் அசௌகரியங்களுக்கு முகம்கொடுத்து வந்தனர். இந்த நிலையில் நகரசபையின் வேண்டுகோளுக்கமைய வீதி அபிவிருத்தி அதிகாரசபையினரால் குறித்த சீரமைப்புப் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. (ச-100)

# இயற்கைச் சீற்றம் ஒருபுறம் வதைப்பு மறுபுறம் இந்திய மீனவர் அத்துமீறல்!

## வடக்கு மீனவர்கள் கண்ணீர்!

மன்னார், ஜன.15
தொடர்ச்சியான இயற்கைச் சீற்றங்களால் வாழ்வாதாரத்தை இழந்துள்ள நிலையில், இந்திய மீனவர்களின் அத்துமீறிய வருகை வடக்கு மீனவர்களை மேலும் வறுமையில் தள்ளியுள்ளது என்று வடக்கு மாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் செயலாளர் என்.எம்.ஆலம் தெரிவித்துள்ளார். மன்னாரில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,
நாட்டில் நிலவிவரும் சீரற்ற கால நிலை மற்றும் இயற்கை அனர்த்தங்கள் காரணமாக வடபகுதி மீனவர்கள் கடலுக்குச் செல்லமுடியாமல் வீடுகளில் முடங்கியுள்ளனர்.

தமிழக மீனவர்களால் ஈழத்து மீனவர்களுக்கு இழைக்கப்படும் அநீதிக்கு பதில் சொல்ல வேண்டிய பொறுப்பு தமிழக முதல்வருக்கு உண்டு. ஆனால், அவரே இதனை ஊக்குவிக்கிறாரோ என எண்ணத் தோன்றுகிறது.

தமிழகத்துக்கும் ஈழத்துக்குமான மொழி மற்றும் கலாசார உறவை மட்டும் பேசிக்கொண்டிருக்காமல் இங்குள்ள மீனவர்கள் படும் துயரங்களையும் அவர் உணரவேண்டும். இலங்கை கடற்பரப்புக்குள் சில படகுகள் கைதுசெய்யப்பட்டாலும், இந்திய மீனவர்களின் ஒட்டுமொத்த வருகையை இதுவரை கட்டுப்படுத்த முடியவில்லை.

எமது கடல் வளத்தைச் சூறையாடும் இந்திய மீனவர்களின் செயற்பாட்டை உடனடியாகத் தடுக்க இந்திய மற்றும் இலங்கை அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார். (க -56)

# சைவ பரிபாலனசபையின் பரீட்சைகள் அடுத்த வாரம்

யாழ்ப்பாணம்,ஜன.15
நாட்டில் ஏற்பட்ட இடர் நிலைமைகளால் ஒத்திவைக்கப்பட்ட சைவ பரிபாலனசபையின் சமயம், தமிழ்மொழிப் பாடப் பரீட்சைகள் எதிர்வரும் 24ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. பரீட்சார்த்திகளின் சுட்டிலக்கங்கள் மற்றும் பாடத்துக்குரிய நேரசூசிகள் பாடசாலைகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. பரீட்சைகளுக்குப் பாடசாலைகள் ஊடாக விண்ணப்பித்த பரீட்சார்த்திகள் உரிய பாடங்களுக்கு அதே பாடசாலைகளில் பரீட்சைகளுக்குத் தோற்றுமாறு பரீட்சைச் செயலாளர் அறிவித்துள்ளார். (க)



# யாழ்.4 ஆம் வட்டாரத்தின் நிலைமைகள் ஆராய்வு

யாழ்ப்பாணம்,ஜன.15
யாழ்.மாநகரசபையின் 4 ஆம் வட்டார மக்களை, மாநகரசபை முதல்வர் வி.மதிவதனி தலைமையிலான குழுவினர் கடந்த திங்கட்கிழமை நேரில் சந்தித்தனர்.

மாநகரசபை உறுப்பினர் வி.எம்.உதயசிறியின் கோரிக்கைக்கு அமைவாக, பொதுமக்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற பல்வேறு முறைப்பாடுகள் மற்றும் தேவைகள் தொடர்பில் இதன்போது ஆராய்ந்தனர். சில பிரச்சினைகளுக்கு முதல்வரால் உடனடித் தீர்வுகளும் வழங்கப்பட்டன.

முதல்வருடன், மாநகரசபை உறுப்பினர்களான வி.எம்.உதயசிறி, ப.தர்சானந் மற்றும் சு.நிசாந்தன் உள்ளிட்டோரும் இணைந்திருந்தனர். (க)

# மண்பானைகளில் பொங்கலிடுவோம்


## ஐங்கரநேசன் அழைப்பு

யாழ்ப்பாணம்,ஜன.15
மதங்களைக் கடந்து இயற்கையைப் போற்றுகின்ற ஒரு பண்பாட்டுப் பெருவிழாவில், அலுமினிய ஆக்கிரமிப்புகளைக் களைந்து, இயற்கைக்கு இசைவான மண்பானைகளில் அனைவரும் பொங்கலிடவேண்டும் என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன் அழைப்பு விடுத்துள்ளார்.

வட்டுக்கோட்டையில் இடம்பெற்ற மண்பானைப் பொங்கல் பொதிகள் வழங்கும் நிகழ்வில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,
மண்பானைகளின் இடத்தை இப்போது அலுமினியப் பானைகள் ஆக்கிரமித்துவிட்டன. இயற்கைக்கு நன்றி தெரிவிக்கும் ஒரு பெருவிழாவில் அலுமினியப் பானைகள் பொருத்தம் இல்லாதவை. உடல் நலத்துக்குக்கேடானதாகவும் உள்ளது. உடலில் சிறுகச்சிறுகச் சேரும் அலுமினியம் மூளை நரம்புகளைப் பாதிக்கின்றது. இதனால் நினைவாற்றலும் பேச்சுத்திறனும் தடைப்படுகின்றது. ஏற்கனவே சிறுநீரக நோயுடையவர்களின் சிறுநீரகங்கள் மேலும் பாதிப்படைவதோடு எலும்புகளும் பலம் இழப்பதாக ஆய்வுகளில் தெரியவந்துள்ளன.

மண்பானைகள் அவற்றின் மேற்பரப்பில் இயற்கையாகவே உள்ள நுண்ணிய துவாரங்கள் வழியாக வெப்பத்தைப் பரப்பி உணவைச் சீராக வேகவைக்கின்றது. சமைக்கும்போது மண்ணிலிருந்து கனியுப்புகள் உணவுடன் சேர்வதால் உணவின் போசணைப்பெறுமானம் அதிகரிக்கின்றது. இவற்றோடு உணவின் வாசனையுடன் மண்ணின் வாசனையும் சேர்ந்து கொள்ள உணவுக்குத் தனியானதொரு சுவையும் கிடைக்கின்றது. தமிழ் மக்களின் இயற்கையைப் போற்றும் தைப்பொங்கல் திருநாளிலாவது மண்பானைகளில் பொங்கல் இடுவோம். இது நலிவடைந்துள்ள மட்பாண்டக் கைவினைஞர்களது வாழ்வு மேம்படவும் உதவும்- என்றார். (க)



# புதிய பயங்கரவாதத் தடைச்சட்டம் பாதகநிலைமை யாழில் ஆராய்வு!

யாழ்ப்பாணம், ஜன.15
தற்போது நடைமுறையில் உள்ள பயங்கரவாதத் தடைச்சட்டத்துக்கு மாற்றீடாக கொண்டுவரப்படவுள்ள பயங்கரவாதத் தடைச்சட்டத்திலுள்ள ஆபத்துகள் தொடர்பாக தெளிவுபடுத்தும் கலந்துரையாடல் யாழ். பொது நூலக மண்டபத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

வடக்கு- கிழக்கு சிவில் ஒருங்கிணைப்புக் குழுவின் ஏற்பாட்டில் இந்தக் கலந்துரையாடல் முன்னெடுக்கப்பட்டது. இதில் இந்தச் சட்டம் நாட்டின் பாதுகாப்பு மற்றும் ஸ்திரத்தன்மையை உறுதிசெய்வதை நோக்கமாகக் கொண்டது. ஆனால் பரந்த வரையறைகள் மற்றும் கடுமையான பிரிவுகள் காரணமாக, இது பொதுமக்களின் போராட்டங்கள், சிவில் சமூகச் செயற்பாடுகள் மற்றும் புலம்பெயர் சமூகத்தினரை குறிவைக்கக்கூடும் என கருத்துகள் முன்வைக்கப்பட்டன. அத்துடன் இலங்கைக் குடிமக்கள் வெளிநாடுகளில் இருந்தாலும் இந்தச் சட்டத்தின்கீழ் வருவார்கள் சமூக ஊடகங்களில் கருத்துத் தெரிவிப்பவர்களும் பாதிக்கப்படலாம் என்றும் சுட்டிக்காட்டப்பட்டது.

கலந்துரையாடலில், வளவாளராக சட்டத்தரணி ஐங்கரன் கலந்து கொண்டார். பங்குபற்றாளர்களாக பிரதேச சபைகளின் தவிசாளர்கள், சபை உறுப்பினர்கள், மகளிர் அமைப்பின் பிரதிநிதிகள் பல்கலைக்கழக மாணவர்கள் கடற்தொழில் சங்கங்களின் பிரதிநிதிகள் மற்றும் சிவில் அமைப்பின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ச-27,20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய ராசி உங்களுக்கு எப்படி?

**மேடம்:** இன்று எதிலும் பொறுமையுடனும் சிந்தித்தும் செயற்படவேண்டிய நாள். முக்கியமான முடிவுகள் எடுப்பதைக் கண்டிப்பாகத் தவிர்த்து விடவும். உறவினர்களுடன் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**இடபம்:** புதிய முயற்சிகள் சாதகமாகும். நண்பர்களால் அனுகூலம் உண்டாகும். சிலருக்குப் புதிய ஆடை, ஆபரணங்களின் சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டு. வாழ்க்கைத்துணைவழி உறவினர்களால் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும்.

**மிதுனம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். துணிச்சலாக முடிவெடுப்பீர்கள். எதிர்ப்புகளும் இடையூறுகளும் நீங்கும். சகோதரர்கள்மூலம் சில பிரச்சினைகள் ஏற்பட்டாலும் பாதிப்பு எதுவும் இருக்காது.

**கடகம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். உடல் ஆரோக்கியத்தில் கூடுதல் கவனம் தேவை. பிள்ளைகளால் தேவையற்ற செலவுகள் ஏற்படும்.

**சிம்மம்:** எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. உறவினர்கள் வருகையால் மகிழ்ச்சி உண்டாகும். முக்கியமான பிரமுகர்மூலம் எதிர் பார்த்த காரியம் அனுகூலமாகும். சகோதரர்கள் உதவிகேட்டு வருவார்கள்.

**கன்னி:** தேவையான பணம் இருப்பதால் செலவுகளைச் சமாளித்துவிடுவீர்கள். கணவன் – மனைவிக்கிடையே ஏற்பட்டிருந்த மனக்கசப்புகள் நீங்கி, அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**துலாம்:** பல வகைகளிலும் அனுகூலமான நாளாக இருக்கும். அரசாங்கவகையில் எதிர் பார்த்த காரியம் அனுகூலமாகமுடியும். தந்தையிடம் எதிர்பார்த்த பணஉதவி கிடைக்கும்.

**விருச்சிகம்:** மனதுக்கு மகிழ்ச்சிதரும் சம்பவங்கள் நிகழும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. தாய்மாமன் வழியில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும்.

**தனுசு:** பிள்ளைகளால் சில சங்கடங்கள் ஏற்பட்டு நீங்கும். தந்தைவழி உறவினர்களுடன் மனஸ்தாபம் ஏற்படக்கூடும் என்பதால் சற்று எச்சரிக்கையாக நடந்துகொள்வது அவசியம்.

**மகரம்:** மகிழ்ச்சியான நாள். குடும்பப் பொறுப்புகளில் உற்சாகமாக ஈடுபடுவீர்கள். பிள்ளைகள் கேட்பதை வாங்கிக்கொடுத்து அவர்களை உற்சாகப்படுத்துவீர்கள்.

**கும்பம்:** தொடங்கும் காரியங்கள் சாதகமாகமுடியும். குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவு எதுவும் இன்று எடுக்கவேண்டாம்.

**மீனம்:** குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவு எடுப்பதில் பெரியவர்களின் ஆலோசனை அவசியம் வாழ்க்கைத்துணை யால் ஆதாயம் கிடைக்க வாய்ப்பு உண்டு.

# கடற்படையின் கட்டுப்பாட்டிலிருந்து கடற்கோட்டையை விடுவியுங்கள்!

## ஊர்காவற்றுறைத் தவிசாளர் கோரிக்கை

யாழ்ப்பாணம்.ஜன.15

ஊர்காவற்றுறையில் உள்ள சுற்றுலா மையமான கடற்கோட்டை உரிமையைக் கடற்படையினரின் கட்டுப்பாட்டிலிருந்து விடுவித்து ஊர்காவற்றுறைப் பிரதேச சபையிடம் ஒப்படைக்கவேண்டும் என்று தவிசாளர் அ.அன்னராசா கோரிக்கை விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஊர்காவற்றுறைக் கடற்கோட்டை பாரம்பரிய, பிரபல சுற்றுலாத் தலமாகவுள்ளது. இது ஊர்காவற்றுறைப் பிரதேசசபையின் ஆளுகைக்குள் காணப்படுகின்றது. தற்போது கடற்படையினரின் கட்டுப்பாட்டில் உள்ளது. இதனைத் தொல்லியல் திணைக்களத்தினர் மற்றும் கடற்படையினர் பயன்படுத்திவருகின்றனர். இந்தக் கடற்கோட்டைக்கு ஊர்காவற்றுறைத் துறைமுகத்தில் இருந்து 4 நிமிடங்களில் செல்லமுடியும். எனவே எமது ஆளுகைக்குள் உள்ள துறைமுகத்திலிருந்து கடற்கோட்டையைச் சென்று பார்வையிடுவதற்கு ஜனாதிபதி ஆவனசெய்யவேண்டும். சுற்றுலாப் பயணிகள் ஊர்காவற்றுறைத் துறைமுகத்தில் இருந்து கடற்கோட்டைக்குச் சென்று வருவதன் ஊடாக, பிரதேசசபையின் வருமானம் அதிகரிக்கும். அத்துடன் எமது பகுதிக்குச் சுற்றுலாவிகளின் வருகை அதிகரிக்கக்கூடிய சந்தர்ப்பமும் காணப்படுகின்றது.

எனவே பொங்கல் பண்டிகைக்காக யாழ்ப்பாணம் வருகின்ற ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க இதுதொடர்பில் நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றார். (சு-27)



முன்னாள் போராளி ஒருவரின், பாடசாலை செல்லும் பிள்ளைகளுக்கு, ஜனநாயகப் போராளிகள் கட்சியால் துவிச்சக்கரவண்டி அண்மையில் வழங்கப்பட்டது. அனைத்துலக தமிழர் பேரவைத் தலைவர் விநாயகமூர்த்தி நிமாலின் நிதி அனுசரணையில், கட்சித் தலைவர் வேந்தனால் துவிச்சக்கரவண்டி வழங்கப் பட்டது. (க-100)

## கேள்வி அறிவித்தல்
## நல்லூர் பிரதேசசபை, கொக்குவில்
## சபைநிதி மூலமான அபிவிருத்தி வேலைத்திட்டங்கள்

01. நல்லூர் பிரதேச சபை சார்பாக பிரதேச பெறுகைக்குழுவின் தலைவர் கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட வேலைக்கான தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து மூடப்பட்ட கடித உறையில் விலைக்கேள்விகளை கோருகின்றார்.
02. விலைக்கேள்வியானது தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாக கோரப்படுகின்றது.
03. விலைக்கேள்வி பெறத் தகுதியுடையவராவதற்கு வெற்றி பெறும் கேள்விதாரர் கறுப்புப்பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், கீழுள்ள அட்டவணையில் காட்டியபடி புனரமைப்பு வேலைகளுக்கு பொருத்தமான தரத்தில் நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் (CIDA) பதிவு மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.
04. தேவையான தகைமைகள் கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிக்கப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் Bidding Data இல் கேள்வி ஆவணம் பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.
05. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் 'தலைவர், பிரதேச பெறுகைக்குழு, நல்லூர் பிரதேச சபை, 14/5 கருவப்புலம் வீதி கொக்குவில்' எனும் முகவரியில் (தொலைபேசி இலக்கம் - 021-222-2700) இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் ஆங்கிலமொழியிலான கேள்வி ஆவணமொன்றை தலைவர், பிரதேச பெறுகைக் குழு, நல்லூர் பிரதேசசபை, 14/5 கருவப்புலம் வீதி கொக்குவில் என்னும் முகவரியில் 2026.01.16 ஆம் திகதியிலிருந்து 2026.01.29 ஆம் திகதி வரை அலுவலக நாட்களில் மு.ப 9.00 தொடக்கம் பி.ப 03.00 வரையும் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா. 6,000.00 உம் (வரி நீங்கலாக) பணமாகச் செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.
07. கேள்வி ஆவணத்தை இரு பிரதிகளில் (மூலம், பிரதி) பூரணப்படுத்தி தலைவர், பிரதேச பெறுகைக்குழு, நல்லூர் பிரதேசசபை, 14/5 கருவப்புலம் வீதி, கொக்குவில் என்னும் முகவரிக்கு 2026.01.30ம் திகதி மு.ப 10.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக நேரடியாகவோ அல்லது பதிவுத்தபாலிலோ அனுப்பி வைக்கப்படல் வேண்டும் பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
08. கேள்வி பிணை வைப்புத் தொகையினை தலைவர், பிரதேச பெறுகைக்குழு, நல்லூர் பிரதேசசபை என்ற பெயரில் கீழே அட்டவணையில் காட்டப்பட்டவாறு அனுமதிக்கப்பட்ட வங்கியிலோ அல்லது நல்லூர் பிரதேச சபையிலோ செலுத்தி அதன் உண்மைப் பிரதியினை விண்ணப்பப் படிவத்துடன் இணைத்து சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.
09. கேள்வி திறப்பதற்கான முன்னோடிக் கூட்டம் 2026.01.23 ஆம் திகதி நல்லூர் பிரதேச சபை கலாச்சார மண்டபத்தில் மு. ப. 10.00 மணிக்கு நடைபெறும். இக் கூட்டத்திற்கு ஆர்வமுள்ள கேள்விதரரர்கள் கலந்து கொள்ள முடியும்.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | Document Issuing/Purchasing Period | | | From 2026.01.16 - 2026.01.29 | | | |
| | | Pre – Bid Conference | | | At 10.00 A.M On 2026.01.23 | | | |
| | | Closing and Opening of Bid | | | At 10.00A.M on 2026.01.30 | | | |
| தொ.இல | ஒப்பந்த இலக்கம் | வேலை விபரம் | அண்ணளவான மதிப்பீட்டுத் தொகை (மில்லியன்) | ஒப்பந்த காலம் | தேவையான தரம் | கேள்வி செல்லுபடியாகும் காலம் | வேண்டப்படும் கேள்விப்பிணை: பிணை வைப்பு | வேண்டப்படும் கேள்விப்பிணை: செல்லுபடியாகும் காலம் |
| 1 | NPS/2026/CF-I /Thi.Jun | Improvements to Kalviyankadu Kokuvil Road (Thirunelvely Junction Area) | 19.92 | 84 Days | C6 & C5 (Road) | 77 Days | 298,800.00 | 2026.05.14 |

தலைவர்,
பிரதேச பெறுகைக்குழு
நல்லூர் பிரதேசசபை,
கொக்குவில்.

2026.01.15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உண்மை - நேர்மை - அஞ்சாமை


# மாறிய நாட்காட்டியும் மாறாத திசைகாட்டியும்...!

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க யாழ்ப்பாணத்துக்கு மீண்டும் பயணம் மேற்கொண்டிருக்கின்றார். இதற்கு முன்னர் இருந்த ஜனாதிபதிகள் யாழ்ப்பாணத்துக்கோ அல்லது மன்னாருக்கோ வரும்போது வெளிப்படும் மக்களாதரவைக் காட்டினும், ஜனாதிபதி அநுரவுக்குக் கிட்டியிருக்கும் ஆதரவு மிக அதிகம் என்பது வெளிப்படையானது. நல்லது. ஆனால், தேர்தலில் வெற்றிபெற்று ஜனாதிபதியாக முதல்முறை யாழ்ப்பாணத்துக்கு வந்தபோது வழங்கிய வாக்குறுதிகளில், எத்தனை வாக்குறுதிகளை முற்றாக நிவர்த்திசெய்துவிட்டு ஜனாதிபதி மீண்டும் யாழ்ப்பாணத்துக்கு வந்துள்ளார் என்ற பரிசீலனை அவசியமாகின்றது.

'காணாமல் ஆக்கப்படுதலின் வலி என்னவென்று நான் அறிவேன். ஆதலால், காணாமல் ஆக்கப்பட்டோரின் பிரச்சினையை இதயத்தால் அணுகுவேன். நீதி வழங்குவேன்' என்று இதே மண்ணில் வைத்து அநுர அறிவித்திருந்தார். அது மட்டுமல்ல, 'மக்களின் காணிகள் மக்களுக்கே சொந்தம்', 'பலாலியில் தவிர்க்க முடியாத காணிகளைத் தவிர ஏனைய காணிகள் அனைத்தும் மக்களுக்கு வழங்கப்படும்', 'அரசியற்கைதிகளின் விவகாரம் நீதியுடன் அணுகப்படும்', 'பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்படும்' என ஜனாதிபதி அநுர மீண்டும் மீண்டும் வழங்கிய வாக்குறுதிகள் ஏராளம். இன்றைய திகதியில் அந்த அனைத்து வாக்குறுதிகளும் நீர்மேல் எழுத்தாகவே மாறிப் போயின.

கடந்த முறை யாழ்ப்பாணத்துக்கு வந்தவேளையில் தமிழர்களின் மனங்களில் ஒரு நம்பிக்கை நாயகனாகவும், மக்களின் துயர் நீக்கும் ஒரு விடிவெள்ளியாகவுமே அநுர நோக்கப்பட்டார். ஆனால், அவரின் இப்போதைய பயணத்தின் போது, தன் மீதான அதே மனநிலையை அநுர பத்திரப்படுத்தி வைத்துள்ளாரா என்று கேட்டால், இல்லை என்பதுதான் ஒற்றைப் பதில். இலங்கையின் அரசமைப்பில், ஜனாதிபதிக்கு குறித்தொதுக்கப்பட்ட அதிகாரங்களின் அடிப்படையில், அநுர நினைத்திருந்தால், காணி விடுவிப்பை முற்றாகச் சாத்தியப்படுத்தியிருக்கலாம், 'பொதுமன்னிப்பு' என்ற ஒற்றைத் தீர்மானத்தில் அனைத்து அரசியற்கைதிகளையும் விடுத்திருக்கலாம், திஸ்ஸ விகாரைக்குத் தீர்வு கண்டிருக்கலாம். ஆனால், அவர் காட்டியிருப்பது என்னமோ வெறுங்கையை மட்டும்தான்.

கடந்த அரசாங்கங்களின் பாதையில்தான் தற்போதைய அரசாங்கமும் பயணித்துக்கொண்டிருக்கின்றது. 'மாற்று முகங்கள்' ஆட்சிக்கு வந்ததால் ஏற்பட்ட கவனக்குவிவும், வந்த வேகத்தில் நடைமுறைப்படுத்திய ஓரிரு பாதை விடுவிப்புகளும் தேசிய மக்கள் சக்தியினருக்கு வெண்சாயம் பூசியிருக்கின்றதே அன்றி, இவர்கள் ஒன்றும் மீட்பின் தூதுவர்கள் அல்லர். உண்மையிலேயே முறைமை மாற்றத்தை இந்த அரசாங்கம் விரும்புகின்றது என்றால், புதியதொரு அரசியல் கலாசாரத்தைப் புகுத்துவதற்கு எத்தனிக்கின்றது என்றால் தமிழர்களுக்கான தீர்வை வழங்குவதன் மூலமே அந்த மாற்றத்தை வெளிப்படுத்த வேண்டும். ஆனால், அத்தகைய மாற்றம் ஒன்றுக்கு தேசிய மக்கள் சக்தி அரசாங்கமும் தயாராக இல்லை என்பதே நிதர்சனம். ஊழலற்ற ஆட்சியும், அபிவிருத்தியும் அவசியமானவைதான். அதை கொஞ்சம் கூட மறுப் பதற்கில்லை. ஆனால், இதற்காகவே இந்தத்தீவு குருதியில் தோய்ந்தெழுந்தது என்ற புரிதலை ஜனாதிபதி அநுரவும் அவர் தலைமையிலான தரப்பினரும் ஏற்படுத்திக் கொள்வது அவசியம்.


செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111

செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com







## பொய்யாமொழி

ஏரின் உழாஅர் உழவர் புயல்என்னும்
வாரி வளங்குன்றிக் கால்

**பொருள்:** மழை என்னும் வருவாய் வளம் குன்றிவிட்டால், உழவுத் தொழில் குன்றி விடும்




# பாலியல் வன்முறைகள் இலங்கையில் நீள்கின்றன

## நீதிப்பொறிமுறையை இறுக்குங்கள் ஐ.நா மனித உரிமைகள் சுட்டிக்காட்டு

**ஜெனிவா, ஜன.15**

**இலங்கையில் மோதல்களுடன் தொடர்புடைய பாலியல் வன்முறைகள் சர்வதேசச் சட்டங்களைப் பாரதூரமான முறையில் மீறியுள்ளன என்று ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.**

இதுதொடர்பில் வெளியிடப்பட்ட அறிக்கையில், கடந்த காலங்களில் இடம்பெற்ற பாலியல் வன்முறைகளை அரசாங்கம் பகிரங்கமாக ஏற்றுக் கொள்வதோடு, பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதித்துறைக் கட்டமைப்புக்குள் உரிய நீதியை வழங்க உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இலங்கையில் மோதல் தொடர்பான பாலியல் வன்முறைகள் கடந்த காலத்தோடு நின்றுவிடாமல், தற்போதும் தீவிரமாக இடம்பெற்றுவருகின்றது. இத்தகைய கொடூரங்களை எதிர்கொள்ளும் பாதிக்கப்பட்டவர்கள், சமூக அச்சம் மற்றும் சட்டப் பாதுகாப்பின்மை காரணமாக அவற்றை அமைதியாக சகித்துக்கொண்டு மௌனம் காக்கின்றனர்.

பாதிக்கப்பட்டவர்களின் கௌரவத்தைப் பாதுகாப்பதும், அவர்களுக்குப் பாதுகாப்பான சூழலை உருவாக்குவதும் அரசாங்கத்தின் கட்டாய இலக்காக இருக்கவேண்டும். மோதல் தொடர்பான பாலியல் வன்முறைகளைக் கையாள்வதற்கு ஒரு முறையான மற்றும் வலுவான சட்டக்கட்டமைப்பு உருவாக்கப்படவேண்டியது அவசியம் - என்றுள்ளது. (ச-இ)



## வனஜீவராசிகள் அதிகாரி இலஞ்ச மோசடியில் கைது

கொழும்பு, ஜன.15

30 ஆயிரம் ரூபா பணம் மற்றும் உயர்ரக மதுபானப் போத்தல் ஒன்றை இலஞ்சமாகக்கோரிப் பெற்ற வனஜீவராசிகள் அலுவலக அதிகாரி ஒருவர் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டுள்ளார். அம்பாறையைச் சேர்ந்த நபர் ஒருவர் அளித்த முறைப்பாட்டுக்கமைய அவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். (ச)

## மியான்மர் அரசால் 500 தொன் அரிசி

கொழும்பு.ஜன.15

பேரிடரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு விநியோகிப்பதற்காக மியான்மரிலிருந்து 500 மெற்றிக் தொன் அரிசி நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளது. குறித்த அரிசித் தொகையைக் கையளிக்கும் உத்தியோகபூர்வ நிகழ்வு அந்த நாட்டின் யங்கோன் துறைமுக வளாகத்தில் நடைபெற்றது. (ச-இ)

## மின்சாரவேலியில் சிக்கி தம்பதி உயிரிழப்பு

வரக்காப்பொல, ஹுனுவல பிரதேசத்தில் மின்சாரம் தாக்கியதில் கணவன் - மனைவி இருவரும் உயிரிழந்துள்ளனர். வயல் நிலத்தை விலங்குகளிடமிருந்து பாதுகாப்பதற்காக அமைக்கப்பட்டிருந்த மின்சாரக் கம்பியில் சிக்கியே இந்த அனர்த்தம் நேர்ந்துள்ளது. (ச-இ)



## 26,092 நியமனங்களை வழங்க அரசு தீர்மானம்

கொழும்பு, ஜன.15

அரச சேவையில் ஆட்சேர்ப்புச் செயன்முறையை மீளாய்வு செய்தல் மற்றும் பணிக்குழாமை முகாமைத்துவம் செய்வதற்காக நியமிக்கப்பட்டுள்ள குழுவின் விதந்துரைகளை நடைமுறைப்படுத்த அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. அதற்கமைய பல்வேறு அரச துறைகளில் 26 ஆயிரத்து 95 ஆட்சேர்ப்புகள் முன்னெடுக்கப்படவுள்ளன என்று அரசாங்கம் அறிவித்துள்ளது. (எ-இ)

**நாளை**

வெள்ளிக்கிழமை - தை 02

16.01.2026

சுபநேரம் : 06.34 - 08.04

ராகுகாலம் : 11.04 - 12.34


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் பண்பாட்டின் அடையாளம் தைப்பொங்கல்

■ மதுரகவி காரை. எம். பி. அருளானந்தன்



வருடத்திலே முதலாவது மாதம் தை மாதம் முதல் திகதியை மகர சங்கிராந்தி என்பர். உத்தராயணம் ஆரம்பிக்கும் நாளும் அதுவே தென் திசையிலிருந்து வடக்கு நோக்கு சூரியன் திரும்புவதை உத்தராயணம் குறிக்கும். தைமுதல் ஆனி ஈறாகவுள்ள ஆறு மாதங்களைக் கொண்ட உத்தராயணம் புண்ணியகாலம் என்றும், சுப கருமங்கள், மங்கள காரியங்கள் நிகழுகின்ற காலம் என்றும் கொள்ளப்படுகின்றது. உழைப்பின் உயர்வை உழவர்களின் மேன்மையை மதிக்கும் விழாவாகவும் தைப்பொங்கல் விழா பண்டு தொட்டு வழங்கிவருகின்றது. மனித உழைப்பாளிகளுடன் விலங்கு உழைப்பாளிகளையும் நினைத்து நேசித்து நன்றி செலுத்தும் பெருநாளாகவும் தைப்பொங்கல் பண்டிகை விளங்குகின்றது.

## பொங்கல் செய்யும் வீட்டு முற்றம்

பொங்கல் திருநாளில் சூரியன் உதிப்பதற்கு ஐந்து நாழிகைக்கு முன்னர் அதிகாலையில் மக்கள் நித்திரை விட்டு எழுந்து விடுவர். நீராடித் தம்மைத் தூய்மைப்படுத்திக் கொள்வர். வீட்டு முற்றத்தில் சாணத்தினால் மெழுகப்பட்ட நீள் சதுரமான பகுதியை வெள்ளை, சிவப்பு நிற மாவினால் அழகிய கோலமிட்டு மண்டபமாக வடிவமைத்துக்கொள்வர். மலை வாழை, கமுகு, கரும்பு , மகர தோரணங்கள், மலர்கள் என்பவற்றால் அலங்கரிப்பர். அதனுள் அழகிய கோலங்களையும் கலைத்திறன் மிளிர போடுவர். பிள்ளையார் பிடித்து வைத்து குத்து விளக்கேற்றி பூரண கும்பம் வைத்து பழங்கள், வெற்றிலை, பாக்கு, தேங்காய், முதலிய மங்களப் பொருள்களை நிவேதிப்பர். விநாயகனை முதலில் நினைத்து இஷ்ட தெய்வங்களைப் பிரார்த்திப்பர்.

நீரினால் சுத்தம் செய்யப்பட புதுப்பானையை திருவணையில் வைத்து அதன் வாய்ப் பானையை மஞ்சள் இலை, இஞ்சியிலை, மாவிலை ஆகியவற்றைப் பொருத்திக்கட்டி பானையின் மேற்புறத்தில் திருநீற்றைக் குழைத்து திரிபுண்டரமாக மூன்று இடங்களில்பூசி சந்தனம் குங்குமம் திலகமிட்டுப் பானைக்குள் பசும் பாலும் நீரும் விட்டு நிரப்பி தூபதீபம் காட்டி கற்பூர தீபத்தினால் அடுப்பில் நெருப்பை உண்டாக்கி பற்ற வைத்து கணவனும் மனைவியும் ஒருமித்த சிந்தையராய் சூரியனை வணங்கி இஷ்ட தெய்வங்களை நினைத்துப் பானையைப் பக்குவமாய் இருவரும் தமது கைகளால் பற்றிப் பிடித்துத் தூக்கி அடுப்பில் ஏற்றுவர்.

## "பொங்கலோ பொங்கல்"

பானையில் பால் பொங்கி எழும்போது பொங்கலோ பொங்கல் என்று உரத்துக் கூவி மகிழ்வர். தம்முடைய வாழ்வில் இன்பம் பொங்கப் போவதை உணர்த்தும் அறிகுறியாகப் பால் பொங்கி ஓங்கி எழுவதைக் கண்டு அவர்களின் மனமும் பொங்கிப் பூரிக்கும். பால் பொங்கி வடக்கு முகமாக வேனும், கிழக்கு முகமாக வேணும் ஈசானத்தை நோக்கியேனும் முதலில் சரிந்து வெளித்தள்ளினால் அதனை நன் நிமிர்த்தமாக கருதிப் புளங்காங்கிதம் கொள்வர். அதன் பின்னர் குடும்பத் தலைவர் புது நெல்லில் குற்றியெடுத்த பச்சையரிசியை தம் இரு கைகளாலும் அள்ளி சூரிய பகவானை வழிபட்ட வண்ணம் பானையின் வாய் விளிம்பினை மும்முறை சுற்றி பானையுள் இடுவர்.

தொடர்ந்து குடும்பத் தலைவி, குடும்பப் பெரியோர்கள், பிள்ளைகள் என்போர் அரிசியைப் பானையில் இட்டு பொங்கல் பெருவிழாவை சூரியனுக்கு நிறைவேற்றி மகிழ்வர்.

## பொங்கல் படையல்

பொங்கல் அமுதினை மூன்று தலைவாழையிலைகளில் படைத்து, பழங்கள், கரும்பு, செவ்விளநீர், மலர்கள் முதலியவற்றைக்கொண்டு மடைபரவி தேங்காய் உடைத்து வைத்து நீரும் மலரும் கொண்டு அர்ச்சித்து தூப தீபம் காட்டி பக்தி சிரத்தையோடு திருமுறைகளைப் பாராயணம் செய்வர்.


இன்னார் இனியார் உயர்வு, தாழ்வு என்னும் பேதங்களின்றி ஒரே விதமாக எல்லோருக்கும் அவற்றை வழங்கும் சூரியனுக்கு நன்றி தெரிவிக்கும் முகமாகத் தைமுதல் நாளில் பொங்கல் விழா எடுத்து வருகின்றமை தமிழ் மக்களின் நயத்தக்க நாகரிகத்தையும் உயர் பண்பாட்டையும் காட்டுகின்றது.

ஆகவே தைப்பொங்கல் இன்பப் பொங்கலாக, அறிவுப் பொங்கலாக, இனிமைப் பொங்கலாக மகிழ்ச்சிப் பொங்கலாக, சர்வ மங்களப் பொங்கலாக அமையவேண்டி இறைவனைப் பிரார்த்திப்போமாக.




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## சீரோங்கு வாழ்வுதரும் தைத்திருநாள்!!



கீழ்த்திசைக் கதிரவன் எழவே குருகினம்
வாழ்த்துகள் பாடப் பனிதூங்கும் மலரினம்
சாய்ந்தே அசைந்திட மகிழ்ந்திடும் வண்டினம்
ஆய்ந்து வட்டமிடும் காலையிளம் பொழுதில்,
தண்ணார் மணியோசை விண்ணோங்கி ஒலித்திட
தாணு மாலயன் கோயில்கள் ஒளிர்ந்திட
மண்ணோர் மகிழ்வுற மங்கலம் நிறைந்திட
கண்ணார் தைமகள் தானின்று மலர்ந்தாள்!
ஊருக்கு உணவளிக்கும் உழவனுக்கும், ஏர்தாங்கும்
எருதுக்கும் ஏற்றந்தரும் திருநாள் தையொன்று!
பாருக்குள் விளைகின்ற பயிருக்கு உயிராகும்
பகலவனைப் போற்றுகின்ற நாளதுவும் தையொன்றே!
காலத்தின் கோலமதாய் விளைந்திட்ட துன்பமெலாம்
களைந்தே நலமளிக்கும் கற்பகமாம் தையெனவே
ஞாலத்தின் விளக்காக வழிகாட்ட வருகின்ற
கோலத் திருமகளாம் தையதனை வரவேற்போம்!

நீர்வை இரா. தில்லைராஜன்

## ஆனந்த வாழ்வுக்கு அடிகோலும் தைப்பொங்கல்

இன்றைய தைப்பொங்கல்! இனிப்பான தமிழ்ப்பொங்கல்!
இதயம் மகிழ்ந்திட வரும் இனிய தைப்பொங்கல்!

ஆனந்த வாழ்வுக்கு அடிகோலும் தைப்பொங்கல்
ஆறுதலும் தேலுதலும் தரும் அருமையான தைப்பொங்கல்

இன்ப வாழ்வில் எங்கள் உள்ளம் இனித்திடவே
நாவில் ஜலம் ஊறவைக்கும் நல்லதொரு தைப்பொங்கல்!

உதய சூரியனாய் உதித்து வரும் கதிரவனுக்கு
இதய நன்றி கூறிடும் இனிய தைப்பொங்கல்!

உள்ளம் மகிழ உலகோர் வியக்க
வெள்ளமாய் பரவும் இனிப்பான தைப்பொங்கல்!



கவிமணி இராசையா ஸ்ரீதரன்










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




### வீடமைப்பு அமைச்சின் வீட்டுத்திட்டத்தில்

# 500 வீடுகளை அமைப்பதற்கு யாழ்.மாவட்டத்துக்கு ஒதுக்கீடு

**யாழ்ப்பாணம், ஜன.15**

**யாழ்ப்பாணம் மாவட்டத்தில் வீடமைப்பு நிர்மாணிப்பு மற்றும் நீர் வழங்கல் அமைச்சின் வீட்டுத்திட்டத்தின் கீழ் 500 வீடுகளை அமைப்பதற்கான ஒதுக்கீடுகள் கிடைத்துள்ளன என்று யாழ்.மாவட்டச் செயலர் ம.பிரதீபன் தெரிவித்துள்ளார்.**

வீட்டுத்திட்டப் பயனாளிகளைச் சுற்றறிக்கைக்கு ஏற்றவாறு தெரிவுசெய்வதற்கான அறிவுறுத்தல்கள் பிரதேச செயலர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

யாழ். மாவட்டச்செயலகத்தில் நேற்றுமுன்தினம் இந்த ஆண்டு நடைமுறைப்படுத்தப்படவுள்ள வீட்டுத்திட்டம் தொடர்பாக பிரதேச செயலர்களுடன் கலந்துரையாடல் ஒன்று நடத்தப்பட்டது. அதிலேயே மாவட்டச் செயலர் இந்தத் தகவல்களைத் தெரிவித்தார்.

வெள்ள இடரால் பாதிக்கப்பட்டுக் கொடுப்பனவுகளைப் பெறாதுள்ளவர்கள் தொடர்பாகவும், கொடுப்பனவு வழங்க வேண்டியவர்களின் எண்ணிக்கை தொடர்பாகவும் பிரதேச செயலர்களிடம் கேட்டறிந்த மாவட்டச் செயலர், அதுதொடர்பான அறிவுறுத்தல்களையும் கலந்துரையாடலில் வழங்கினார் என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ-66)

## அத்துகோரள கொலை; பெப்ரவரியில் தீர்ப்பு!

கொழும்பு,ஜன.15

நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் அமரகீர்த்தி அத்துகோரள கொலை வழக்கின் தீர்ப்பை அறிவிப்பதை எதிர்வரும் பெப்ரவரி மாதம் 11 ஆம் திகதி வரை ஒத்திவைக்க கம்பஹா நிரந்தர மூவரடங்கிய மேல்நீதிமன்றநீதிபதிகள் குழாம் தீர்மானித்துள்ளது.

கடந்த 'அரகலய' போராட்ட காலத்தின்போது, 2022 மே 9 ஆம் திகதி நிட்டம்புவ பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டு சம்பவத்தில் அமரகீர்த்தி அத்துகோரள உயிரிழந்தார்.

இதில் அவரது தனிப்பட்ட பாதுகாப்பு உத்தியோகத்தரும் உயிரிழந்ததுடன், இந்தக் கொலைகள் தொடர்பில் பல சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-இ)

## கற்றல் உபகரணங்களை வாங்க மாணவர்களுக்குக் கொடுப்பனவு

கொழும்பு, ஜன.15

கற்றல் உபகரணங்களைப் பெற்றுக் கொள்வதற்கு மாணவர்களுக்குக் கொடுப்பனவு வழங்கும் வேலைத்திட்டம் இந்த ஆண்டிலும் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

அஸ்வெசும உரித்துள்ள குடும்பங்களிலுள்ள பாடசாலை செல்லும் பிள்ளைகளுக்கு உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காக மாணவர் ஒருவருக்கு 6,000 ரூபா கொடுப்பனவை நலன்புரிகள் நன்மைகள் சபை மூலமாக வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதன்படி குறித்த வேலைத்திட்டத்தை இவ்வாண்டிலும் நடைமுறைப்படுத்துவதற்கு கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சராக பிரதமர் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (ச-இ)



## 789 வழித்தடத்தில் புதிய பஸ் சேவை!

யாழ்ப்பாணம், ஜன.15

சித்தன்கேணி - யாழ்ப்பாணத்துக்கான 789 வழித்தடத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை முதல் இலங்கை போக்குவரத்துச் சபையின் காலை நேரப் பேருந்துச் சேவை புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

சித்தன்கேணிச் சந்தியில் தினமும் அதிகாலை 5 மணியளவில் பேருந்துச் சேவை ஆரம்பமாகி யாழ். நகரை அதிகாலை 5.45 மணியளவில் சென்றடையும்.

பின்னர் யாழ்.நகரிலிருந்து அதிகாலை 6 மணியளவில் சித்தன்கேணிச் சந்தியை நோக்கிப் பேருந்துச் சேவை இடம்பெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-66-17)

## பண்டிகை முற்பணத்தை அதிகரிக்க அங்கீகாரம்

கொழும்பு, ஜன.15

அரச ஊழியர்களுக்கு வழங்கப்படும் பண்டிகை முற்பணத்தை அதிகரிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதுவரைகாலமும் 10 ஆயிரம் ரூபாவாக வழங்கப்பட்ட பண்டிகை முற்பணத்தை, 15 ஆயிரம் ரூபாவாக அதிகரிப்பதற்கு 2026ஆம் ஆண்டு வரவுசெலவுத் திட்டத்தில் முன்மொழியப்பட்டுள்ளது.

இந்த அதிகரிப்புக்கு ஏற்றவாறு தாபன விதிக்கோவையில் திருத்தம் செய்வதற்கும், சுற்றறிக்கை ஆலோசனைகளை வெளியிடுவதற்கும் பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. [illegible]

## ஒண்டுமே உருப்படேலையே!

*'ஒரேயொரு ஊரிலே ஒரேயொரு ராஜா*
*ஒரேயொரு ராஜாவுக்கு ஒரே ஒரு ராணி*
*அந்த ராணி பெற்றாள் ஒன்பது பிள்ளை*
*அந்த ஒன்பதிலே ஒன்றுகூட உருப்படியில்லை'*

**இப்பிடியொரு பழைய பாட்டு இருக்கு. அதைமாதிரித்தான் திசைகாட்டிக்காரர் பிடுங்கிற எல்லாமே தேவையில்லாத ஆணியளாவே இருக்கு. ஆட்சிக்கு வந்த கையோட அடிச்சுப் பிடிச்சு, முந்தின அரசாங்கங்கள் செய்யமுடியாததை எல்லாம் தாங்கள் வெட்டிவிழுத்தப்போறம் எண்டு சீன் காட்டினவை, இப்ப வெறும் வாகனங்களின்ர ஸ்ரிக்கரை உரிக்கிறதோடையும், ஓட்டோவில இருக்கிற குரங்குப் பொம்மையளைப் பிடுங்கிறதோடையும் நிக்கிறதைப் பாக்கச் சிரிப்புத்தான் வருது. அந்த வேலையைக்கூட அரைகுறையோட விட்டிட்டினம் எண்டது வேறகதை.**

**வாகனத்துல இருக்கிற ஸ்ரிக்கரை உரிக்கிறதும், மினி பஸ்ஸுல சலங்கையைக் கழட்டுறதும்தான் பெரிய புரட்சியோ? இதைச் செய்யிறதுக்கோ சனம் உங்களுக்கு வோட்டுப் போட்டவை? அஜித்தின்ர படமொண்டில "சைட் கண்ணாடியைத் திருப்பினால் எப்பிடி ஓடும்?" எண்டு கருணாஸ் கேப்பார். அதைமாதிரி ஓட்டோவில பின்னுக்குத் தொங்கிற குரங்குப் பொம்மையைக் கழட்டினா இலங்கையின்ர கடன்பிரச்சினை தீர்ந்துபோடுமோ? எண்டு கேக்கோணும் போல கிடக்குது.**

**மன்னார்ல காத்தாடி பூட்டிறதை நிப்பாட்டுவம் எண்டு சொல்லிப்போட்டு, பிறகு இவையளே அங்க காத்தாடி கட்ட வெளிக்கிட்டு, அதுக்கு எதிராப் போராடின சனத்துக்கு பொலிஸை வைச்சு அடிச்சுக் கலைச்சவை. உதைத்தானே முந்தின ஆக்களும் செய்தவை. அதைத்தான் நீங்களும் செய்யப்போறியள் எண்டால், அவையே ஆட்சியிலை இருந்திருக்கலாமே. தையிட்டியில் பிக்கு விகாரைக்காக அடாத்தா பிடிச்சு வைச்சிருக்கிற, சனத்தின்ர காணியைத் திருப்பித் தருவம் எண்டு சொன்னதும் இப்ப காத்துல பறந்த கதையாப் போயிட்டுது. முதலாம் வகுப்பும், ஆறாம் வகுப்புக்கும் 'புது சிலபஸ்' கொண்டுவரப்போறம், நாட்டின்ர சிஸ்டத்தையே மாத்தப்போறம் எண்டு தம்பட்டம் அடிச்சினம். இப்ப பார்த்தால் இங்கிலிஷ் புத்தகத்தில பிழை எண்டு எதிர்ப்பு வர, முதலாம் வகுப்புக்கு மட்டும் புது சிலபஸ், ஆறாம் வகுப்புக்கு அதே பழைய சிலபஸ் எண்டு பின்வாங்குகினம். பாவம் பொடியள், புது சிலபஸா? பழைய சிலபஸா? எண்டு குழம்பி திசையறியாம நிக்கப்போகுதுகள்.**

**அதைவிட, பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்குவம், அரசியல்கைதியளை விடுவிப்பம் எண்டு எலக்சன் காலத்தில கடுமையா வாய்ச்சவாரி விட்டவை? இப்ப அந்த விசயங்களெல்லாம் ஆறினகஞ்சி எண்ட ரேஞ்சுல கிடக்குது. 'ஈஸ்டர் தாக்குதலின்ர குடுமி இப்ப வெளியில வரும், அப்ப வெளியில வரும் சூத்திரதாரியள் ஆரெண்டு ஆறு மாதத்துக்க காட்டுவம்' எண்டும் பில்டப் காட்டினவை. அந்த விசாரணை எந்தக்குப்பைக்கூடைக்குள்ள இருக்கெண்டது அநுரவுக்குத்தான் வெளிச்சம். பெரிய யானை வரும் எண்டு எதிர்பார்த்து இருந்த சனத்துக்கு, வெறும் புனுகுப் பூனை வந்த மாதிரித்தான் இவையின்ரை கதையும் கிடக்கு. பெரிய பெரிய பிரச்சினையளைக் கையில எடுத்துத் தீர்க்க வக்கில்லை, ஆனால் சின்னச் சின்ன வேலைகளைச் செய்து, அதைப்பெரிசாக்காட்டி சனத்தைப் பேய்க்காட்டலாம் எண்டு நினைக்கினம் போல. இப்பிடியே போனால், இன்னும் கொஞ்சக் காலத்துல சனம் திசைகாட்டியைத் தூக்கிக் கிணத்துக்க போட்டுட்டுத் தாங்களையும் வேற திசையளுக்குப் போறதுதான் நடக்கும் கண்டியளோ.**

padsi@uthayan.com -பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கிளிநொச்சி பாரதிபுரத்திலுள்ள செஞ்சோலை வளாகத்தில் தங்கியுள்ள குடும்பங்களுக்கான பொங்கல் பொருள்கள் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை வழங்கப்பட்டன.

புலம்பெயர் உறவான மகாராஜா நேசரையால் அவரது தாய் தந்தையரான கணபதி மகாராஜா, மகாராஜா துரையம்மா ஆகியோரின் நினைவாக இவை வழங்கப்பட்டன. (ச-41-55)





பருத்தித்துறை நகரில் தைப்பொங்கல் பண்டிகையை முன்னிட்டு, பொங்கல் பானைகள், கரும்பு, பட்டாசு உள்ளிட்ட பொருள்கள் விற்பனை செய்யப்பட்டன. மக்கள் பொங்கலுக்குத் தேவையான பொருள்களை ஆர்வமுடன் வாங்கிச் சென்றதை அவதானிக்க முடிந்தது. (ச-100)


## வேலையாட்கள் தேவை

கொழும்பு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம், பருத்தித்துறை மற்றும் வவுனியா நகரில் அமைந்துள்ள PPT நிறுவனத்திற்கு வேலையாட்கள் தேவை.

- முகாமையாளர்
- அலுவலக உதவியாளர்
- பேருந்து நடத்துனர்
- காசாளர்

(உணவு மற்றும் தங்குமிட வசதிகள் வழங்கப்படும்.)
கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.
தொடர்பு:077 386 6250


# முல்லை. மருத்துவமனையில் உருவாகவுள்ள புதிய விடுதி

## இந்தியாவுடன் விரைவில் ஒப்பந்தம்

முல்லைத்தீவு மாவட்ட பொது மருத்துவமனையில் ஐந்து மாடி மருத்துவ விடுதித் தொகுதியை நிர்மாணிக்கும் கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக இந்திய அரசாங்கத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தைமேற்கொள்ள அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனை சிகிச்சைகளை வழங்கும் 8 விசேட நிபுணத்துவ அலகுகள் காணப்படுவதுடன், மொத்தமாக 195 நோயாளர்களான கட்டில் வசதிகளும் உள்ளன, மூன்றாம் நிலை சிகிச்சை நிறுவனமாக இயங்குகின்ற பிரதான மருத்துவமனையை மேம்படுத்துவதற்கு எடுக்கப்பட்டுள்ள படிமுறைகளின் கீழ், முல்லைத்தீவு மாவட்ட பொது மருத்துவமனையில் ஐந்துமாடி மருத்துவ விடுதித் தொகுதியை நிர்மாணிப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்துக்காக 600 மில்லியன் ரூபா நிதியுதவியை வழங்க இந்திய அரசாங்கம் உடன்பட்டுள்ளது. அதற்காக இந்திய அரசாங்கத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மேற்கொள்வதற்கு சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (எ-இ)


## இதய அஞ்சலி

பிறப்பு 18 . 01 . 1940
இறப்பு 11 . 01 . 2026



கிளிநொச்சி மகாதேவ ஆச்சிரம மூத்த அறங்காவலரும்,
சைவ, சமூக தொண்டருமாகிய
**கந்தையா இராசரத்தினம் (குரு ஐயா)**
(இளைப்பாறிய பதிவாளர் - கிளிநொச்சி காணித்திணைக்களம் & யாழ்ப்பாணம் நீதிமன்றம், சமாதான நீதவான்)


அவர்கள் இறைபதமடைந்த செய்திகேட்டு துயர் அடைகின்றோம். அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா தில்லை கூத்தன் திருவடியில் சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி ! சாந்தி ! சாந்தி !

அறங்காவலர் - நிர்வாக உறுப்பினர்கள்
மகாதேவ ஆச்சிரமம்
கிளிநொச்சி

(CS/60458) J-1

## கண்ணீர் அஞ்சலி



யா/ நல்லூர் பெனடிக்ற் றோ.க
வித்தியாலயத்தின் ஆசிரியை
**திருமதி நிலாமதி இளங்கீரன்**
அவர்களின் பாசமிகு தந்தை

**கிட்மன் தவம்**

அவர்கள் 12.01.2026 திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார். அவரின் இறப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்
யா/நல்லூர் சென் பெனடிக்ற் றோ.க.வித்தியாலயம்

தோற்றம் 12.04.1947
மறைவு 12.01.2026

(CS 60454) E

## விழி நீர் சொரிகின்றோம்

மண்ணில் 11 . 10 . 1987
விண்ணில் 13 . 01 . 2026



**அமரர் பகீரதி புருசோத்தமன்**
(சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்
பிரதேச செயலகம் - ஊர்காவற்றுறை)

காவலூர் மண்ணின் புதல்வியே..!
மக்கள் பணி செய்து
அனைவரதும் மனம் கவர்ந்த
வித்தகியே பகீரதி..!!

உன் ஆத்மா தெய்வத்திருப்பாதக் கமலத்தில் நித்திய சாந்திபெற பிரார்த்திக்கின்றோம். அன்னாரின் இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினர், உறவினர்கள், அயலவர்கள், அனைவருக்கும் எமது ஆழ்ந்த இரங்கல்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!


ஊழியர் நலன்புரிச் சங்கம்
பிரதேச செயலகம்
ஊர்காவற்றுறை

பிரதேச செயலாளரும்
உத்தியோகத்தர்களும்

(CS 60451) E

## 33 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 06 . 04 . 1926
மறைவு 19 . 01 . 1993



**அமரர் இ.ச பேரம்பலம் ESP**
(வாரிவளவு, காரைநகர்)

பாசத்தின் சிகரமாய்
பார் புகழும் வணிகனாய்
ஊர் போற்றும் உத்தமனாய்
சீர் பெற்று வாழ்ந்தீர்கள்
வணிகத்தில் வழிகாட்டியாய்
வடபுலத்தில் வணிகப் பெருமகனாய்
வாழ வழிகாட்டிச் சென்றீர்
நீங்கள் எம்மை விட்டுச் சென்று
முப்பத்து மூன்று ஆண்டுகள் கடந்தாலும்
ஆறுமோ நம் துயரம்
உங்கள் ஆத்மா சாந்திபெற
எல்லாம் வல்ல வாரிவளவு
கற்பக விநாயகர் பாதம் பணிந்து
வணங்கி நிற்கின்றோம்.

383, மணி ஓசை,
கோவில் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

[illegible]கலாநிதி இ.ச.பே. நாகரத்தினம் PMJF
குடும்பத்தினர்.

(CS 31001) E


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வல்வெட்டித்துறையில் 84 ஆவது குருதித்தானம்

யாழ்ப்பாணம்,ஜன.15

வல்வெட்டித்துறை குருதித்தானச் சங்கத்தின் 84ஆவது குருதித்தான முகாம் எதிர்வரும் 25ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி முதல் வல்வெட்டித்துறை நெடியகாடு கணபதி மஹால் திருமண மண்டபத்தில் நடைபெறும். பருத்தித்துறை ஆதார மருத்துவமனை குருதி வங்கியில் ஏற்பட்டுள்ள குருதித்தட்டுப் பாட்டை நிவர்த்தி செய்யும்வகையில் இந்த முகாம் ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளது.

குருதிக்கொடை வழங்குபவர்களை ஊக்குவிக்கும்வகையில் கற்றல் உபகரணங்கள் மற்றும் சிறப்புப் பரிசுகள் வழங்கப்படும். அவர்களில் ஒருவருக்கு வெள்ளிப்பதக்கம் அணிவித்து கௌரவிப்பு வழங்கப்படும். குருதிக்கொடை வழங்க விரும்புவோர் (தொடர்பு இலக்கம் 0779911131) முன்பதிவு செய்யுமாறு வல்வெட்டித்துறை குருதித் தானச்சங்கத்தலைவர் பா. வீரசுரேந்திரன் கேட்டுள்ளார். (க-100)

## பட்டிப்பொங்கல் விழாவும் கோமாதா ஊர்வலமும்

யாழ்ப்பாணம்,ஜன.15

பட்டிப்பொங்கல் விழாவும், கோமாதா ஊர்வலமும் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் மணிக்கு யாழ்.நகர் கே. கே.எஸ். வீதியிலுள்ள சத்திரத்து ஞான வைரவர் ஆலயத்தில் இடம் பெறவுள்ளன.

பசுக்கள் இடபங்கள் பாதுகாப்பு இணையத் தலைவர் ப.பாலசுப்பிரமணியம் தலைமையில் நடைபெறும் நிகழ்வில், ஆலயத்திலிருந்து ஆரம்பித்து மின்சாரநிலைய வீதி (பெரியகடை), யாழ். பேருந்து நிலைய மேற்கு வீதி, மருத்துவமனை வீதியூடாக கோபவனி ஆலயத்தை வந்தடையும்.

அன்றைய தினம் முற்பகல் 11 மணிக்கு ஆலயத்தில் பட்டிப்பொங்கலைத் தொடர்ந்து பிற்பகல் ஒரு மணிக்கு கோ பூசை இடம்பெறும்.

நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன், யாழ்.மாவட்டச் செயலர்

ம.பிரதீபன், யாழ்.மாநகரசபை முதல்வர் மதிவதனி விவேகானந்தராசா, யாழ். மாநகரசபை ஆணையாளர் ச.கிருஷ்ணேந்திரன் மற்றும் கல்வியாளர்கள், வர்த்தகப் பிரதிநிதிகள் கலந்து கொள்வர். ஊர்வலத்தில் பங்குபற்றும் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும் வழங்கப்படவுள்ளன. (க)

# இன, மத ஆதிக்கப்போக்கு இவ்வாண்டில் ஒழியட்டும்!

### தைப்பொங்கல் வாழ்த்துச் செய்தியில் இந்து சமயப் பேரவை தெரிவிப்பு

கடந்த காலத் துன்பங்கள் நீங்கி, அனைவரது உள்ளங்களிலும் மகிழ்ச்சி பொங்கிவழியவேண்டும் என யாழ்ப்பாணம் இந்து சமயப் பேரவை தனது தைப்பொங்கல் வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளது. இது தொடர்பாக அந்தப் பேரவையின் தலைவர் ஈசான சிவ. சக்தி கிரீவன் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில்,

உலக இயக்கத்திற்கு ஆதாரமாக விளங்கும் சூரிய பகவான், தெக்ஷிணாயனம் முடிந்து உத்தராயணத்தில் பிரவேசிக்கும் இந்த நன்னாளில், அவருக்கு நன்றி செலுத்திப் பொங்கலிட்டு மகிழ்வது எமது மரபாகும். போகிப் பண்டிகை, தைப்பொங்கல், பட்டிப் பொங்கல் என மூன்று தினங்கள் மகிழ்ச்சி தரும் நாட்களாக அமைகின்றன. பழைய கசப்பான நினைவுகளை மறந்து, புதிய திட்டங்களைத் தீட்டும் சிறப்பான நாளாக இது அமைகிறது.

நாட்டில் நீண்டகாலமாகப் புரையோடிப் போயுள்ள இன மற்றும் மத வேறுபாடுகள் முற்றிலும் ஒழியவேண்டும். அதிகாரபலத்தைப் பயன்படுத்திக் கொண்டு, பிற இன அல்லது மத மக்கள் மீது ஆதிக்கம் செலுத்தும் போக்கு முடிவுக்கு வரவேண்டும். அதுவே உண்மையான சமூக மறுமலர்ச்சியாக அமையும்- என்றுள்ளது. (ச)

## தைப்பொங்கல் விழா

யாழ்ப்பாணம்,ஜன.15

மட்டுவில் மோகனதாஸ் சனசமூக நிலையமும் சனசமூக நிலைய கலைக்கழக இணைந்து நடத்தும் தைப்பொங்கல் விழா இன்று காலை 9 மணிக்கு. சனசமூக. நிலைய முன்றலில் சனசமூகநிலைய தலைவர். ந.ஜெயகாந்தன். தலைமையில் நடைபெறவுள்ளது.

தொடர்ந்து மாலை நிகழ்வாக கலைஞர்களின் கலைநிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன. யாழ்ப்பாண பல்கலைக்கழக கல்வியியல் துறை விரிவுரையாளர் இரத்தினசிங்கம் சர்வேஸ்வரா ஆற்றுவார். (ச-131)

## பிரதோச விரதம்

யாழ்ப்பாணம்,ஜன.15

வரலாற்றுச் சிறப்பு மிக்க கீரிமலை நகுலாம்பிகாதேவி சமேத நகுலேஸ்வரர் ஆலயத்தில் தைப்பிறப்புக்கு மறுநாள் வருகின்ற சிறப்பு வாய்ந்த பிரதோஷ விரத உற்சவம் நாளை வெள்ளிக்கிழமை மாலை பக்திபூர்வமாக இடம்பெறவுள்ளது. (ச-66)

## பொங்கல் விசேட பூசை

யாழ்ப்பாணம்,ஜன.15

தமிழர் திருநாளான தைப்பொங்கலை முன்னிட்டு, மயிலிட்டி வீரமாணிக்க தேவன்துறை கண்ணகி அம்மன் ஆலயத்தில் இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு விசேட பூசை இடம்பெறும். (க-100)

## பட்டிப்பொங்கல்

யாழ்ப்பாணம்,ஜன.15

மல்லாகம் பழம்பதி ஆலய இந்து இளைஞர் சங்கம் நடாத்தும் பட்டிப்பொங்கல் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு ஆலய முன்றலில் நடைபெறும். நிகழ்வில் பொங்கல், உழவர்களைக் கௌரவித்தல் மற்றும் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலைநிகழ்வுகள் இடம்பெறும். (க-17)

**தங்குமிடம் தேவை**

கிளிநொச்சி கரடிப்போக்கு சந்திக்கும் கந்தசாமி கோவிலுக்கும் இடைப்பட்ட பகுதியில் அரச உத்தியோகத்தர் ஒருவர் தங்கியிருந்து வேலைக்கு செல்வதற்கு ஓர் தங்குமிடம் தேவைப்படுவதால் இதனை வாடகைக்கு விடுபவர் தொடர்புகொள்ளவும்.

தொடர்பு: 071 47 44 511

**வேலைவாய்ப்பு**

யாழ் நகரில் இயங்கிவரும் பிரபல ஹோட்டல் ஒன்றிற்கு ஓட்டுநர் / சாரதி தேவை.

தகைமைகள் :-
- கனரக வாகனங்களை ஓட்டுவதற்கு மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகம் வழங்கிய உரிமம்.
- குறைந்தபட்சம் 03 வருட அனுபவம் இருத்தல் வேண்டும்.

தொடர்புகளுக்கு:- 070 745 8567

(CS31007) J-1




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடர்பாடுகள் நீங்கி இன்பம் பொங்கட்டும்!



மகிழ்ச்சியுடன் தை மகளை நாம் வரவேற்றாலும். எமது பூர்விக நில ஆக்கிரமிப்பு, வழிபாட்டுச் சுதந்திரம் மறுக்கப்படுதல் போன்ற பல்வேறு சவால்களுக்கு மத்தியிலேயே தமிழ் மக்கள் இன்று வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். இத்தகைய மன வேதனைகளும் இடர்பாடுகளும் நீங்கி, தமிழ் மக்கள் கௌரவத்துடனும் நிம்மதியுடனும் வாழும் சூழல் உருவாகவேண்டும் என்பதே இந்த பொங்கல் நன்னாளின் பிரதான பிரார்த்தனையாகும்.

இலங்கை போன்ற பன்முகத்தன்மை கொண்ட நாட்டில், ஏனைய சமூகங்களின் கலாசார விழுமியங்களை நாம் மதித்து வாழும் அதேவேளை, எமது உரிமைகளைப் வென்றெடுக்க வேண்டியது அவசியமாகும். இதற்குத் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் அனைவரும் சுயநலன்களுக்கு அப்பால் ஒற்றுமையுடன் செயற்பட வேண்டும்.

மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய வெளிப்படைத்தன்மையுடன் கைகோர்க்கவேண்டும். தனித்துவம் பேணி, ஒரே சிந்தனையுடன் ஆக்கபூர்வமான பயணத்தை முன்னெடுக்க வேண்டும்.

ஒற்றுமையின்மையே எமது உரிமைகள் தாமதமாவதற்குக் காரணமாகிறது. எனவே, இந்தப் பொங்கல் நன்னாளில் அனைவரும் ஒருமித்த குரலில் பயணிப்போம் எனத் திடசங்கற்பம் பூணுவோம்.

தமிழ் மக்களின் உன்னதமான அறுவடைத் திருநாளாம் தைப்பொங்கல் திருநாளை உலகெங்கும் வாழும் தமிழ் உறவுகள் மகிழ்ச்சியுடன் வரவேற்கும் இவ்வேளையில், அனைவருக்கும் எமது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**சிவஸ்ரீ. கு.வை. க. வைத்தீஸ்வரக் குருக்கள்.**
தலைவர், இந்துக் குருமார் அமைப்பு.
தலைவர், அகில இலங்கை இந்து கலாசாரப் பேரவை.

**சிவஸ்ரீ. ச. சாந்தரூப குருக்கள்.**
செயலாளர், இந்துக் குருமார் அமைப்பு.

யாழ்ப்பாண வர்த்தக கண்காட்சியில்

எதிர்வரும் ஜனவரி 23, 24 மற்றும் 25ம் திகதிகளில் இடம்பெறும் யாழ் சர்வதேச வர்த்தக கண்காட்சியில் இலக்கம் 03 இல் அமைந்துள்ள எமது காட்சியறைக்கு விஜயம் செய்து வாகனம் பழுது பார்க்கும் உபகரணங்களான

- Garage Equipment
- Wheelcare Equipment
- Air Compressors

போன்றவற்றை விசேட விலைக்கழிவில் அன்றைய தினங்களில் பெற்றுக்கொள்ளலாம்.




Building a future based on trust
தொடர்புகளுக்கு:
076 182 7565, 076 581 3862, 077 396 3110
யாழ்ப்பாண தொடர்புகளுக்கு:
North and East Engineering
No.55, Stanly Road, Jaffna.
Ph - 077 232 3000

உங்கள் அனைவருக்கும் வளமும், செழிப்பும் நிறைந்த தைப்பொங்கல் வாழ்த்துகள்!



இன்று, அறுவடையைப் பகிர்ந்து பால் பொங்கி வரும் போது, நீங்கள் குடும்பத்துடன் மகிழ்ச்சியாகக் கொண்டாடும் வேளையில், HNB உங்கள் அபிலாஷைகளுக்கு வலிமையையும், உங்கள் இல்லங்களில் மகிழ்ச்சியையும் பெற்றுத்தருமென நாம் உறுதியளிக்கிறோம்.

உங்களுக்கும், உங்கள் அன்புக்குரியவர்களுக்கும் மகிழ்ச்சியான மற்றும் வளமான தைப்பொங்கல் தின வாழ்த்துகள்!

HNB

Hatton National Bank PLC - PQ 82

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தாவும் இளமான்போல தைமாது வந்தாள்

ஆனையூர்க் கவிராயர்

வான் கதிரை நன்றியுடன் வரவேற்று என்றும்
ஊன் உயிரைக் காக்கின்ற உன்னதத்தைப் போற்றி
தேன் தமிழின் சுவைததும்ப செந்தமிழர் பொங்க
வான் தவழ்ந்து தையென்னும் வண்ணமகள் வந்தாள்.

பெருமழைதான் "டித்வா" வாம் பெரும்புயலின் சேயாக
தெரு மனைகள் மாந்தருயிர் அழித்தொழித்தே கொடிய
செருக்களமாக நாட்டினையே சீரழித்த பின்னே
ஒரு மனதாக துயர்போக்க உதயமகள் வந்தாள்.

தீந்தமிழர் இல்லமெல்லாம் தித்திப்பில் நீந்த
காந்தளிளம் மலராக கீழ்க் கதிரொளி வான் சிந்த
பூந்துணராக மனமெங்கும் புத்துணர்வு பொங்க
ஏந்திழையார் வாழ்த்திடவே இன்பத்தை வந்தாள்

மானிடத்து உணர்வுகளின் மதிப்பினை நன்குணர்ந்து
தேனிடத்து இனிமையென தேசமக்கள் எல்லாம்
வானுயர வளர்தோங்கும் சமவுரிமையோடு
தானிணைந்து வாழ்விக்க தைப்பாவை வந்தாள்.

மாவிலை பூந்தோரணங்கள் வனப்பிலங்கு கோலம்
மேவ அதன் நடுவினிலே மின்னிலிடை மாதர்
பூவிரிதலாக இனிய பாலமுது பொங்க
தாவும் இளமான்போல தைமாது வந்தாள்.


## சமகால அரசியல் கலந்துரையாடல்

*யாழ்ப்பாணம்,ஜன.15*

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் ஏற்பாட்டில், சமகால அரசியல் உரையரங்கு நல்லூர் திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், புதிய அரசியல் அமைப்பு மற்றும் தமிழ்த்
தேசியப் பேரவையின் தமிழக அரசியல் தலைவர்களுடனான சந்திப்புத் தொடர்பில் உரையாற்றியிருந்தார். யாழ்.பல்கலைக்கழகத்தின் அரசறிவியல் துறையின் முதுநிலை விரிவுரையாளர் பேராசிரியர் கே.ரி. கணேசலிங்கம் வெனிசுலாவில் அமெரிக்க இராணுவத் தலையீடும் அதில் இருந்து அரசற்ற தேசிய இனங்கள் கற்றுக்கொள்ள வேண்டிய பாடமும் என்ற தலைப்பில் உரையாற்றியிருந்தார். (க)




## மரண அறிவித்தல்



பிறப்பு 11 . 06 . 1952

இறப்பு 14 . 01 . 2026

**தம்பிப்பிள்ளை ஸ்ரீஸ்கந்தராசா**

16/7, சீனியர் லேன், கலட்டி, யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிப்பிள்ளை ஸ்ரீஸ்கந்தராசா அவர்கள் நேற்று (14.01.2026) புதன்கிழமை காலமானார்.

அன்னார் தம்பிப்பிள்ளை - இராசம்மா தம்பதியரின் மகனும், சின்னத்தம்பி - கமலாம்பிகை தம்பதியரின் மருமகனும், கமலாதேவியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற இராசதுரை மற்றும் சாந்தராசா (பிரான்ஸ்), நித்தியானந்ததேவி (கனடா), அனிந்திராதேவி ஆகியோரின் சகோதரரும், தெய்வேந்திரம் (கனடா), கணேஸ், கமலேஸ்வரி (பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனரும், ரதீசன், மிதுசன் (கனடா), சங்கவி ஆகியோரின் தந்தையும் ஆவார்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

16/7, சீனியர் லேன்,
கலட்டி, யாழ்ப்பாண

தகவல்:
குடும்பத்தினர்.
076 785 0407

(CS31011)A




வறுமைக்கோட்டின் கீழ் வாழும் 40 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொருள்கள் சமுர்த்தி அபிவிருத்தி முன்னாள் உத்தியோகத்தர் அமரர் கணேசலிங்கம் சதீஸ் ஞாபகார்த்தமாக அவரின் குடும்பத்தவர்களால் அண்மையில் கோண்டாவில் சமுர்த்தி வங்கியில் வைத்து வழங்கப்பட்டது. (ச)


## மரண அறிவித்தல்

அமரர்
**செல்வரத்தினம் வினோதராசா**

தோற்றம் 15.05.1976

மறைவு 13.01.2026

யாழ்ப்பாணம் காரைநகர் மருதடியை பிறப்பிடமாகவும் விளையாட்டரங்க வீதி கோப்பாய், யாழ்ப்பாணத்தினை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வரத்தினம் வினோதராசா அவர்கள் நேற்று முன்தினம் (13.01.2026) செவ்வாய்க்கிழமை அன்று இறைபதம் அடைந்து விட்டார்.

அன்னார் செல்வரத்தினம் - உஷாதேவி தம்பதியினரின் அன்பு மகனும், Dr.யசோதா, Dr.சிவசங்கரி, சிவாஜினி, Dr.சிவகணேசன், சிவகஜன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், சஞ்சீவன், சேந்தன், சலஜன், சரணியா ஆகியோரின் அன்பு மைத்துனரும், அகன்யா, பிரணிகா ஆகியோரின் அன்பு மாமாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை 16.01.2026 வெள்ளிக்கிழமை முற்பகல் 08.00 மணியளவில் கோப்பாயிலுள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் முற்பகல் 10.00 மணியளவில் செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

077 074 7483
074 149 7059
077 236 4680

தகவல்:
குடும்பத்தினர்.

(CS46909)ER



## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 01 . 05 . 1941

மறைவு 26 . 01 . 2025

**அமரர் சுப்பிரமணியம் சிவானந்தன்**

(களபூமி - காரைநகர்)

குடும்பத்தின் ஒளி விளக்காய்
திகழ்ந்த எம் தந்தையே!
நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்து
ஆண்டு ஒன்று சென்றாலும்
ஆறவில்லை எம் துயரம் ....
என்றும் உங்கள் நினைவுகளுடன்...

இல.05, அம்பலவாணர் வீதி,
அத்தியடி, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

(CS31012)A


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்வி...

ஆண்டுவரை தற்காலிகமாகப் பிற்போடுவதாக அரசாங்கம் நேற்று அறிவித்திருந்தது. இது தொடர்பில் ஊடகமொன்றுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே, பணிகள் கைவிடப்படவில்லை என்றும், மேலும் வினைத்திறனாகச் செயற்படும் வகையில் அவை பிற்போடப்பட்டுள்ளன எனவும் அமைச்சர் நளிந்த கூறியுள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
கல்வி மறுசீரமைப்பு விவகாரத்தில் 150 குறைபாடுகள் இருப்பதாக எதிரணிகள் கூறுகின்றன. ஆனால், எத்தகைய குறைபாடுகள் உள்ளன என்று சுட்டிக்காட்டப்படவில்லை. விமர்சனங்களையும் கருத்துக்களையும் முன்வைப்பதை நாங்கள் வரவேற்கின்றோம். ஆனால், அர்த்தமுள்ள விமர்சனங்களாக அவை அமைய வேண்டும்.
கல்வி மறுசீரமைப்புத் தொடர்பில் கருத்தாடலை ஏற்படுத்தவும், துறைசார்ந்தவர்களிடம் மேலதிக தகவல்களைப் பெறவுமே நாம் கால அவகாசம் எடுக்கின்றோம். கல்வி மறுசீரமைப்பு கட்டாயம் செய்யப்பட வேண்டும். மாணவர்கள் தொடர்பில் கூடுதல் அக்கறையுடன் செயற்படுவதாலேயே கால அவகாசம் எடுத்துள்ளோம் - என்றார். (அ-ம-44)

## இன்பர்சிட்டியில்...

சந்தேகநபர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.
சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:-
பருத்தித்துறை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட இன்பர்சிட்டி பகுதியில் சந்தேகத்துக்கு இடமான வகையில் நடமாடிய ஒருவரிடம் இராணுவத்தினர் விசாரணை நடத்தியுள்ளனர். இதன்போது, அந்த நபர் கஞ்சா பொதிகளை உடமையில் வைத்திருந்தமை தொடர்பில் தெரியவந்துள்ளது.
இதையடுத்து பருத்தித்துறை பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டு மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கையில், புதைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் 28 கிலோ கஞ்சாவும், பிறிதொரு இடத்தில் இருந்து 12 கிலோ கஞ்சாவும் மீட்கப்பட்டது.
சம்பவம் தொடர்பில் இருவர் கைது செய்யப்பட்ட நிலையில், அவர்கள் இருவருக்கும் எதிரான சட்ட நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-100)

## அரிசி...

இன்றைய நிலைவரப்படி மரதகஹமுலவில் முதற்தர நாட்டரிசி ஒரு கிலோவின் மொத்த விலை 225 ரூபாவரை உள்ளது.
வெள்ளைப் பச்சை அரிசி 208 ரூபா முதல் 212 ரூபா வரையிலும், சிவப்புப் பச்சை அரிசி வகைகள் 205 ரூபா முதல் 210 ரூபா வரையிலும் விற்பனையாகின்றன. கீரிச் சம்பா 340 ரூபாவையும், சம்பா 260 ரூபாவையும் கடந்து சென்றுள்ளது. சம்பா மற்றும் கீரிச் சம்பா அரிசியின் விலை அதிகரிக்கும் போது, விவசாயிகள் அவற்றை பயிரிடச் செல்வதால், வெள்ளைப் பச்சை அரிசி மற்றும் நாட்டரிசிக்கு தட்டுப்பாடு ஏற்படும். ஆகையால் நெல் விலை அதிகரிப்பதாயின், இந்த மூன்று வகைகளுக்கும் விவசாயிகளுக்கு நியாயமான விலை வழங்கப்பட வேண்டும் - என்றார். (அ-ம)

## மின்கட்டணம்...

டில், அதாவது எதிர்வரும் ஏப்ரல் மாதம் வரை மின்கட்டணம் உயராது என்று பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.
2026ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் மார்ச் மாதம் வரையிலான மின்சாரக்கட்டணத் திருத்த முன்மொழிவை 2025 ஆண்டு நவம்பர் மாதம் 14ஆம் திகதிக்குள் சமர்ப்பிக்குமாறு 2025ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் மின்சார சபைக்கு பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழு அறிவுறுத்தல் வழங்கியிருந்தது.
எனினும் டிசெம்பர் மாதம் 29ஆம் திகதியே மின்சாரசபையால் முன்மொழிவு முன்வைக்கப்பட்டது. எனினும், அதில் உள்ள குறைபாடுகள் காரணமாக ஜனவரி மாதம் 8ஆம் திகதிக்கு முன்னர் திருத்தப்பட்ட முன்மொழிவைச் சமர்ப்பிக்குமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டது. அந்த அறிவுறுத்தல்கள் எவையும் மின்சார சபையால் நிறைவேற்றப்படவில்லை.
இதையடுத்தே, இந்த வருடத்தின் முதலாவது காலாண்டில் மின் கட்டணத்தை உயர்த்த அனுமதிக்கப் போவதில்லை என மின்சாரசபை அறிவித்துள்ளது. (அ-ம)

## யாழ்ப்பாணத்தில்...

போதைப்பொருள் பாவனையைக் கட்டுப்படுத்துவது தொடர்பில், தேசிய செயற்பாட்டுக் குழுக்களை அமைப்பது தொடர்பான கலந்துரையாடல் யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தில் நேற்று நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றும்போது அமைச்சர் மேலும் தெரிவித்ததாவது:-
நாட்டில் உள்ள 25 மாவட்டங்களிலும் போதைப்பொருள் பாவனைக்கான புனர்வாழ்வு மையங்களை அமைக்க நாங்கள் நிதி ஒதுக்கீடு செய்துள்ளோம். அதேபோல யாழ்ப்பாண மாவட்டத்திலும் புனர்வாழ்வு மையத்தை அமைக்கவுள்ளோம். அதற்குரிய பொருத்தமான இடத்தைத் தெரிவு செய்து வழங்குமாறு, மாவட்டச் செயலரையும் அமைச்சர் சந்திரசேகரையும் கோருகின்றேன். இந்தத் திட்டம் வெற்றிபெறுவதற்கு மக்களின் ஒத்துழைப்பு அவசியம் - என்றார். (அ-ம-26)

## ஊழல்...

திரேலிய தூதுவர் மத்தியூ டக்போர்ட், தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் யாழ்ப்பாண அலுவலகத்துக்கு நேற்றுப் பயணம் மேற்கொண்டார். அங்கு அமைச்சர் சந்திரசேகருடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே, ஜனாதிபதி அநுர தலைமையிலான அரசாங்கம் ஊழல் இல்லாத அரசாங்கமாகப் பயணிக்கின்றது எனப் பாராட்டியுள்ளார்.
டித்வா புயலால் பாதிக்கப்பட்ட இலங்கை மக்களுக்கு அவுஸ்திரேலிய அரசாங்கம் வழங்கிய மனிதாபிமான உதவிகளுக்கு அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், தூதுவர் டக்போர்ட்டிடம் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்தார். பேரிடர் காலங்களில் அரசியல் வேறுபாடுகளைத் தாண்டி மக்களுக்காக துணைநிற்பதே உண்மையான சர்வதேச நட்பின் அடையாளம் என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.
அரசாங்கத்தின் மீது வடக்கு மக்கள் வைத்துள்ள நம்பிக்கை, அந்த நம்பிக்கைக்கு துரோகம் இழைக்காத வகையில் அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்டுவரும் வேலைத் திட்டங்கள் தொடர்பாகவும் தூதுவருக்கு அமைச்சர் சந்திரசேகர் தெளிவுபடுத்தினார். அமைச்சரின் கருத்துக்களை தூதுவர் மத்தியூ டக்போர்ட் நுணுக்கமாகக் கேட்டறிந்தார்.
இலங்கையில் இனவாதம் தோற்கடிக்கப்பட வேண்டும். மக்களின் வாழ்வில் பல தசாப்தங்களாக பதிந்துள்ள வலியும், வடுக்களும் ஆற வேண்டும். நீதியையும் சமத்துவத்தையும் அடிப்படையாகக் கொண்ட உண்மையான நல்லிணக்கம் இலங்கையில் மலர வேண்டும் என்று தனது வாழ்த்துகளையும் தூதுவர் இதன் போது பதிவு செய்தார். (அ-ம-26)

## உயர்ரக...

விசேட கண்காணிப்பு நடவடிக்கையிலேயே இந்த [illegible] கைப்பற்றப்பட்டுள்ளன. சந்தேகநபர்கள் மூவரிடமும் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (அ-ம-26)

## ஜனாதிபதி...

மணிக்கு இடம்பெறும் பொங்கல் விழாவிலும், மாலை 4 மணிக்கு மருதடி விநாயகர் ஆலயத்தில் இடம்பெறும் பொங்கல் விழாவிலும் ஜனாதிபதி கலந்துகொள்ளவுள்ளார்.
அத்துடன், நாளை காலை 9 மணிக்கு மீசாலை ஆரம்பப் பாடசாலையில் இடம்பெறும் வீட்டுத்திட்ட காசோலை கையளிப்பு நிகழ்விலும், மாலை 2 மணிக்கு கொக்குவில் தொழில்நுட்ப கல்லூரி மைதானத்தில் போதைக்கு எதிரான விசேட நிகழ்விலும் ஜனாதிபதி கலந்து கொள்ளவுள்ளார். (அ-ம-26)

## வல்வையில்...

விழா' இன்று நடைபெறவுள்ளது. வல்வெட்டித்துறை உதயசூரியன் கடற்கரையில் இன்று பிற்பகல் ஒரு மணிமுதல் இந்த விழா இடம்பெறவுள்ளது. (அ-ம-26)

## போதைப்பொருள்...

அமைக்கப்பட்டது. 'போதை இல்லாத நாடு: மகிழ்ச்சியான நாளை' என்ற தொனிப் பொருளின் கீழ் இந்தக் குழு அமைக்கப்பட்டுள்ளது. இதற்கான கலந்துரையாடல் அமைச்சரும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவருமான சந்திரசேகர் தலைமையில், பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபாலவின் பங்குபற்றுதலுடன், யாழ்ப்பாணம் மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் நேற்று இடம்பெற்றது.
நிகழ்வில் மதகுருமார்கள், வடமாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன், நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜெயசந்திரமூர்த்தி றஜீவன், கருணநாதன் இளங்குமரன், சண்முகநாதன் சிறிபவானந்தராஜா, பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ரவி செனவிரத்ன, மாவட்டச் செயலர் மருதலிங்கம் பிரதீபன் ஆகியோரும் பங்குபற்றினார்கள். (அ-ம-26)

## போதைப்பொருளை...

ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்துள்ளார்.
போதைப்பொருள்களை முழுமையாக ஒழிப்பதற்கான 'முழுநாடுமே ஒன்றாக' எனும் தேசிய செயற்பாடு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ், மாவட்டச் செயற்பாட்டுக் குழுவை உருவாக்குவதற்கான கலந்துரையாடல் ஆளுநரின் தலைமையில் நேற்று இடம்பெற்றது. இதன்போது ஆளுநர் மேலும் தெரிவித்ததாவது:-
எமது நாட்டில் போதைப்பொருள் பாவனையால் இளம் சமுதாயம் பெரியளவில் பாதிக்கப்பட்டுள்ளது. எவ்வளவோ குடும்பங்கள் தங்களின் வாழ்க்கையைத் தொலைத்துள்ளன. அவர்களின் எதிர்காலம் கேள்விக்குறியாகியுள்ளது.
போதைப்பொருளைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கையை முப்படையினர் மற்றும் பொலிஸாரால் மாத்திரம் மேற்கொண்டுவிட முடியாது. இந்த நடவடிக்கையில் பொதுமக்களும் கைகோர்க்க வேண்டும். அதன் மூலமே எங்கள் எதிர்காலச் சந்ததியைப் பாதுகாக்க முடியும்,
அதேவேளை, போதைக்கு அடிமையானவர்களை மீட்பதுக்குரிய செயற்றிட்டமும் அவசியமானது. வடக்கு மாகாணத்தில் இதற்கெனத் தனியான புனர்வாழ்வு நிலையம் இல்லாத நிலையில், பாதிக்கப்பட்டவர்கள் கந்தக்காடு புனர்வாழ்வு நிலையத்துக்கே அனுப்பப்படுகின்றனர். அங்கும் போதிய இடவசதி இல்லாத நிலைமை காணப்படுகின்றது. எனவே, எமது மாகாணத்தில் தனியானதொரு புனர்வாழ்வு நிலையத்தை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்- என்றார். (அ-ச-113)

## நான்கு...

கரையோர பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தை மீறி கடற்கரையில் கட்டுமானத்தை அமைத்தமை மற்றும் சிலை வைத்தமை தொடர்பில், வனவாசி பலங்கொட கசியப்ப தேரர், திருகோணமலை கோட்டை விகாராதிபதி கல்ஞான வன்ஸ திஸ்ஸ தேரர், சுகித்த வன்ஸ தேரர், சிறிமாபுர விகாரையைச் சேர்ந்த நந்த தேரர் ஆகிய தேரர்களுக்கும், கோட்டை விகாரையின் நிர்வாகக் குழு உறுப்பினர்களுக்கும் எதிராக வழக்குத் தொடரப்பட்டது.
இந்த வழக்கு நீதிபதி எம்.எஸ்.எம்.சம்சுதீன் முன்னிலையில் நேற்று விசாரணைக்காக எடுக்கப்பட்டது. இதன்போது, சட்டவிரோத கட்டுமானங்களை அகற்றினால், சமாதானமான முறையில் வழக்கை முடிவுக்குக் கொண்டுவர முடியும் என கரையோர பாதுகாப்புத் திணைக்களத்தின் சார்பாக முன்னிலையாகிய சட்டத்தரணிகளால் தெரிவிக்கப்பட்டது. எனினும், எதிர்த்தரப்பினர் அதற்கு இணக்கம் வெளியிடவில்லை.
இதையடுத்தே, கரையோர பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தை மீறிய குற்றச்சாட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ள கைதுக்கு தன்னால் பிணை வழங்க முடியாது என்று தெரிவித்த நீதிபதி, அவர்கள் அனைவரையும் எதிர்வரும் 19ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.
குற்றஞ்சாட்டப்பட்ட இருவர் நீதிமன்றத்தில் நேற்று முன்னிலையாகவில்லை. இதையடுத்து, அவர்கள் தொடர்பில் எதிர்வரும் 19ஆம் திகதி தீர்மானம் எடுக்கப்படும் என்று நீதிமன்றம் அறிவுறுத்தல் வழங்கியுள்ளது. (அ-ம-50)

**காணி விற்பனைக்கு உண்டு**

**யாழ்ப்பாணம் அரியாலை ஆனந்தம் வடலி வீதியில் (AV வீதி) 3ம் ஒழுங்கையில் 3 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.**

- 1 1/2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்.
- AV வீதி முகப்புடன்.
- யாழ்ப்பாண பஸ் நிலையம் 4km தூரம்.
- A-9 வீதியிலிருந்து 400 m தூரம்.
- ஒரு பரப்பின் விலை 60 இலட்சம் ரூபாய்.

**தொடர்பு:- 076 860 2770
076 987 8617**

(CS 31005) A

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பால்மாவின் விலை ரூ.125 குறைகிறது!

யாழ்ப்பாணம், ஜன. 15
இறக்குமதி செய்யப்படும் ஒரு கிலோகிராம் பால்மாவின் விலையை நாளைமுதல் 125 ரூபாவால் குறைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதன்படி, 400 கிராம் பால்மா பைக்கற்றின் விலை 50 ரூபாவால் குறைவடைய வுள்ளது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## வெனிசுலா நோக்கி ரஷ்யப் படைகள்!

வெனிசுலாவுக்கு அருகிலுள்ள கடற்பரப்புகளில், அமெரிக்கா தாக்குதல் நடத்தினால் பதில் தாக்குதலை நடத்துமாறு ரஷ்ய அதிபர் புடின் தனது படைகளுக்கு உத்தரவிட்டுள்ளார். வெனிசுலா வில் இருந்து கச்சா எண்ணெயைக் கொள்வனவு செய்வதற்காக சில கப்பல்களை ரஷ்யா அனுப்பி யுள்ளது. இதைய டுத்தே புடின் இத்த கைய உத்தரவைப் பிறப்பித்துள்ளார். (ம)

Archanah ACADEMY
TEXTILE PRINTING INSTITUTION
ஆடைகளில் அச்சிடும் பயிற்ச்சி
யாழ்ப்பாணத்தில்
2026 ஜனவரி 17-18 தேதிகளில்
காலை 9.30 முதல் மாலை 4.30 வரை
இடம்: YMCA, கண்டி ரோடு, யாழ்ப்பாணம்- 109
தொடர்புக்கு: 07705 97294
Whatsapp India: +91 944 777 4131

## பதின்நான்காம் ஆண்டு நினைவஞ்சலியும்



தோற்றம் 15 . 03 . 1936

மறைவு 20 . 01 . 2012

மீசாலை

### அமரர்
### திருமதி புஸ்பலதிகவதி கணேசலிங்கம்

(இளைப்பாறிய பிரதிக்கல்விப் பணிப்பாளர் - தென்மராட்சி வலயம்)

திதி : அபரபக்க துவாதசி

கரு தந்து உயிர் தந்து உடல் தந்த தாயே!
அன்புடன் அறிவு தந்து உயர வைத்தாய் நீயே!
அதிகாலை எழுந்ததும் நின்முகம் தேடும் நமைவிட்டு
கணப் பொழுதில் விண்ணுலகம் சென்றது தானேனோ?
ஆண்டுகள் பதினான்காகித் தவிக்கின்றோம் உனைப்பிரிந்து
ஆறுதல் சொல்ல நமக்கு இனி யார் இவ்வுலகில்?
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

குடும்பத்தினர்.

35/1A, குமாரசாமி வீதி, கந்தர்மடம்

"சிவகிரி" மீசாலை வடக்கு, மீசாலை.

72/27, பனிக்கர் ஒழுங்கை, திருநெல்வேலி.

(CS 31201)

# மரண அறிவித்தல்

## நடராஜன் நந்தகுமார்



தோற்றம் 09.02.1972 மறைவு 08.01.2026

யாழ். சாவகச்சேரி மடத்தடி வீதியைப் (1st மைல் லேன்) பிறப்பிடமாகவும், பிரித்தானியா லண்டன் Harrow வை வசிப்பிடமாகவும் கொண்ட நடராஜன் நந்தகுமார் அவர்கள் 08.01.2026 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்ற சுப்பையா நடராஜன் (ஆசிரியர் - சாவகச்சேரி இந்து கல்லூரி, இந்து ஆரம்ப பாடசாலை) மற்றும் திலகவதி தம்பதிகளின் அன்பு மகனும், திரிவேணி (கனடா), ரூபகுமார் (பிரித்தானியா), இதயவேணி (பிரித்தானியா) ஆகியோரின் அன்புச் சகோதரரும், யசோகரன் (கனடா), சிவகௌரி (பிரித்தானியா), பகிரங்கன் (பிரித்தானியா) ஆகியோரின் அன்பு மைத்துனரும், ஓவிகா, ஜீவிகா, ஜீவன், நடிஷ், நிதிஷ் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 8.00 Am - 10.00 AM மணியளவில் Hendon Cemetery and Crematorium Holders Hill Rd, London இல் நடைபெற்று தகனக்கிரியைகள் 10.45 A.M மணியளவில் நடைபெறும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

தகவல்: குடும்பத்தினர்

(CS 60460)

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com
இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 15.01. 2026 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org